بسم الله الرحمن الرحيم

அல்.கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 2	1925௵ ஜூன்௴	பகுதி. 6

இஸ்லாமும் சுயேச்சையும்

இஸ்லாமிய ராஜீய முறை

நெ. 1.

குடியரசு ஜனனாயகம் என்னும் தத்துவத்தை அடிப்படையாய்க் கொண்ட எண்ணம் உலகமெல்லாம் பரவிவிட்டது. ஜனனாயக தத்துவத்திற்கு விரோதமானவும்; சுயேச்சை, சுயமதிப்பு ஆகியவைகளை ஏற்றுக்கொள்ளாததுமான எதேச்சாதிகாரத்தை வெறுக்காத தேசமே இன்று உலகில் கிடையாதென்று கூறுவது மிகையாகாது.

மனிதர்கள் சுயேச்சையிலும், சுய மதிப்பிலும் விசேஷ அக்கரையுள்ளவர்களாக இருந்து வருகின்றனர். ராஜீயம், சட்டம், சுயேச்சை ஆகிய ஒவ்வொன்றிலும் மனிதர்கள் எவ்வித்தியாசமுமின்றி சமத்துவமான உரிமையுடையவர்களென்னும் உண்மை அநேகமாய் ஒப்புக்கொள்ளப்பட்டே வருகின்றது. ஒவ்வொரு சமூகமும் தன் தேசத்தின் நன்மையை யடைய பாத்யதை யுடையதுதான் என்பதை இன்று எவராலும் மறுக்க முடியவில்லை. ஒவ்வொரு தேசத்தவரும் அவ்வவ்தேசத்தின் உரிமைகளைப் பெறுவதில் அன்னியர்களைக் காட்டிலும் அதிக பாத்யதையைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே உலகி

ளுள்ள ஒவ்வொரு சமூகமும் தங்களின் நியாயமான உரிமையைப் பெறுவதற்கு வேண்டிய துறையில் சகல முயற்சிகளையும் செய்து வருகின்றன. சுயேச்சை, சுயமதிப்பு சம்மந்தமாய் உலகில் ஆரம்ப மான காரியங்களுள் பல பூர்த்தியடைந்தும் விட்டன.

உலகில் ஐந்திலொரு ஜனத்தொகையினர்களான முஸ்லிம்கள் சுயேச்சை சம்மந்தமான கிளர்ச்சியில் முதன்மையானவர்களாக விருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஏனெனில்? முஸ்லிம்களின் நபியாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் மனிதர் களின் அடிமையாக விருக்கும் மனிதர்களை மீட்பதற்காகவே உலகில் தோன்றினார்கள்.

சுயேச்சையை அடைவதற்கான முயற்சியைச் செய்யாமல் ஒதுங்கி நிற்கின்ற முஸ்லிம்களின் அறியாமையைக் கண்டு மேல் நாட் டாருங்கூட ஆச்சரியமடையாமலில்லை. முஸ்லிம்களின்மீது அதிக இரக்கமுள்ளவர்களைப்போல் நடிக்கும் சில மேல் நாட்டார் முஸ்லிம் கள் சுயேச்சையை அடைவதற்கான வழியில் பிரவேசிக்காமல் முஸ் லிம்களுக்கு புத்திமதி சொல்லவும் பின்வாங்குவதில்லை. முஸ்லிம்கள் தங்கள் கால்களில் கிடக்கும் அடிமை விலங்கை உடைத்தெரிவதற்கு முயலுவார்களாயின் அவ்விலங்கு இன்னமும் உறுதிப் படுத்தப் படு மென்று முஸ்லிம்களை மேல்நாட்டார் பயமுறுத்தி வந்தனர்.

சுயேச்சையை யடைவதற்காக அரசாங்கத்தை யெதிர்த்து கிளர்ச்சி செய்வது குர்ஆன்ஷரீபின் போதனைக்கும் இஸ்லாமிய சரித்திரத்திற்கும் முரணானதென்று மத உபதேசிகளென அழைத் துக்கொள்ளும் அஹ்மதியாக்களும், அஹ்மதியரல்லாத சில ஆலிம் களும் முஸ்லிம்களுக்கு ஹிதோபதேசம் புரிந்துவந்தனர். ஆயி னும் எதிர்பாராத பல பேராபத்துகள் அடுத்தடுத்து (இஸ்லாமிய உலகத்திற்கு) நிகழ்ந்து வந்ததால் முஸ்லிம்கள் விழித்து விட்டார்கள்.

முஸ்லிம்கள் சுயேச்சையாக விருந்தகாலத்தில் முஸ்லிம்களுக் கிருந்துவந்த பெருமை, கீர்த்தி நன்மை முதலியவைகள் இன்று முஸ்லிம்களின் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. தங்களைப் படைத்த நாயனின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டுமென்ற பேராவலைக் கொண்டவர்களாய் இன்று முஸ்லிம்கள் இருந்து வருகின்றனர்.

இஸ்லாம் கற்பிக்கும் சுயேச்சை சுயமதிப்பு சம்மந்தமான படிப் பினையை முஸ்லிம்கள் இன்று கற்க ஆரம்பித்து விட்டனர். ஆகவே சுயேச்சையை யடைவதற்கான கிளர்ச்சியில் சம்பந்தப்பட வேண்டா

மென்று முஸ்லிம்களுக்கு மார்க்க உபதேசம் செய்தவர்கள் இன்று அவமதிப்புக்காளாகி நிற்கின்றனர்.

இலௌகிக வாழ்க்கை, வைதீக வாழ்க்கை ஆகிய இரண்டையும் சீர்திருத்துவதற்காக இஸ்லாம் தோன்றியதாய் இஸ்லாம் அறிவிக்கின்றது. இம்மை மறுமை ஆகிய இரண்டும் சம்மந்தமான படிப்பினைகள் யாவும் இஸ்லாமில் அடங்கியிருக்கும் ஸ்திதியில் ராஜீயம் தேசீயம் சம்மந்தமான கடமைகளை இஸ்லாம் ஏற்படுத்தவில்லை யென்று வைத்துக் கொண்டால் முஸ்லிம்கள் செய்யவேண்டிய கடமைகளுள் அரை பாகத்தை செய்ய வழியற்றுப்போகின்றது. ஆகவே இம்முறையை உண்மை முஸ்லிம்கள் அங்கீகரிக்க முடியாது. ஆனது பற்றியே இஸ்லாமிய ஆட்சி சம்மந்தமான நடவடிக்கைகளை ஒவ்வொரு முஸ்லிம்களும் அறியவேண்டியது கடமையாக விருக்கின்றது.

கடலிலும் கரையிலும் சமாதான மின்மை.

இன்றைக்கு 1343 ஆண்டுகளுக்கு முன் உலகம் ஏதேச்சாதிகார முறையினாலேற்பட்டுவந்த கொடுந் துன்பங்களுக் கிரையாகி வந்தது. மனிதர்கள் அடிமையின் விலங்குகளால் வெகு அழுத்தமாய்க் கட்டப்பட்டிருந்தனர். அரசர்களையும் பட்டினத்தின் தலைவர்களையும், அதிகாரம் படைத்த சமூகப் பெரியார்களையும் அந்நாளில் தெய்வங்களென்றே ஜனங்கள் மதித்து வந்தனர். அப்போலி தேவதைகளின் உத்தேசங்களைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டியதே அத்தேவதைகளின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தவர்களின் ஜனன லக்ஷியமெனக் கருதப்பட்டது. அரசர்களையும், அதிகாரிகளையும் தெய்வங்களென்று மதித்துவந்த ஜனங்கள் தங்களுக்கென சொந்தமாய் செய்யவேண்டியவைகள் எதுவும் கிடையாதென்றே நினைத்திருந்தனர்.

அரசர்களாகவும் அதிகாரிகளாகவுமிருந்த தேவதைகள் தமதிஷ்டம்போல் செய்யும் சேஷ்டைகள் யாவும் புகழுக்குரியனவென்றே நம்ப வேண்டியதாக விருந்தது.

மஸீஹுக்கு 1700 வருஷங்களுக்கு முன்னிருந்த அரசர்களை தெய்வமென்றும் அல்லது தெய்வத்தின் நிழல் என்றும், அவ்வரசர்கள் குற்றமற்றவர்களென்றும், பரிசுத்தமானவர்களென்றும் கருதப்பட்டு வந்ததால் எகிப்து தேசத்தின் அரசராகவிருந்த "பிர்அவுன்" தன் தர்பாரிலிருந்தவர்களை நோக்கி, "மூஸா, (அலைஹிஸ்லாம்)வின் ஆண்டவன் யார்? நான் உங்களின் பெரிய நாயனாக விருக்கின்றேன்" என்று அறிவித்தார்.

இல்தானியர்களின் தேசத்தில் நம்ரூதையும், பாபலேயும் வணங்குவதற்காக ஆலயங்கள் கட்டப்பட்டு வந்தன. இந்தியாவில் ராஜாக்களை தெய்வ அவதாரங்கள் என்றே கருதப்பட்டு வந்தது. ரோமாதேசத்தின் போப்பை ஆண்டவனுடைய புத்திரரின் பிரதிநிதியென மதித்து அவர் சமூகத்தில் சாஷ்டாங்கம் செய்யப்பட்டு வந்தது.

ரோம் தேசத்துக் கைஸரும் பாரிஸ் தேசத்து கிஸ்ராவும் உண்மையில் தெய்வங்களல்ல வாயினும் அவர்கள் தெய்வங்களாகவே பாவிக்கப் பட்டுவந்தனர். அவர்கள் ஜனனத்தில் மனிதர்களைக் காட்டிலும் சிரேஷ்டமானவர்கள் என்று நம்பப்பட்டனர். அவ்வரசர்களுக்கு முன்னால் வீற்றிருப்பது குற்றமென்றும், அவ்வரசர்களின் முன் பேசுவது பாவமென்றும், அவர்களின் பெயரைச் சொல்வது மரியாதையற்ற காரியமென்றும் ஜனங்கள் கருதிவந்தனர். அவ்வரசர்களின் கீர்த்திகளுக்குத் தகாத சிறிய ஆக்ஷேபனைகளும் தூக்கிலிடுவதற்குப் போதிய குற்றமெனக் கருதப்பட்டது. தேசத்தின் பொக்கிஷம் அரசர்களின் சொந்த உபயோகத்திற்கென்றும், தேசத்திலுள்ள பிரைஜைகள் அரசர்களின் அடிமைகளென்றும் கருதப்பட்டன.

மேற்கூறப்பட்டுள்ள அடிமைத்தனத்தின் வாழ்க்கையில் ஜனங்கள் சிக்குண்டு உலகம் கீர்த்தியை யிழந்து கேவலமான நிலைமையிலிருந்து வந்தபோது செங்கடலி னோரத்திலுள்ள பாலைவனமான பூமியில் ஓர் அரபி அரசர் உதயமானார்கள். அவ்வரசர் ஆச்சரியப் படத்தக்க அற்புதங்களின் சக்தியைக்கொண்டு கைஸர், கிஸ்ரா ஆகியவர்களின் சிம்மாஸனங்களைத் தலைகீழாய்ப் புரட்டிவிட்டார்கள். அவ்வரசர் ரோமா தேசத்தின் (சாஷ்டாங்கத்திற்குரிய) போப்புடைய கீர்த்தியை யொழித்துவிட்டார்கள்.

உலகத்தவர்களுக்குப் போடப்பட்டிருந்த விலங்குகளை அவ்வரசர் துண்டு துண்டாக உடைத்தெறிந்து விட்டார்கள். சுயேச்சை சுய மதிப்பு உறுதி சமத்துவம் முதலியவைகளின் பிரகாசத்தால் அரசர்களின் நியாயமற்ற கீர்த்திகளை அவ்வரசர் ஒழித்துவிட்டார்கள். ஆகவே உலக அரசர்கள் தங்களின் உயர்பதவியிலிருந்து கீழே இறங்கி மற்ற மனிதர்களோடு சமமானவர்களாக ஆகிவிட்டனர். அன்றியும் பொதுமக்கள் அடிமைத்தனத்தைவிட்டும் விடுபட்டு உயர்வை யடைந்து, எகிப்து கில்தான் ஆகிய தேசங்களின் தேவதைகள், ரோம், ஈரான் தேச அரசர்களான கைஸர், கிஸ்ரா ஆகியவர்களுடைய வரிசைக்கு வந்துவிட்டனர். " புதர்களிலும் குடிசைகளி

லும் உறங்கிக்கிடந்த ஜீவனுள்ள ஹிருதயங்களும் பலமுள்ள அவயவங்களும், ஹிஜாஸ் தேசத்து சைனியங்களின் சப்தம் அதிர்ச்சி ஆகியவைகளின் 'மூலமாய்' விழித்து வெளிக்கிளம்பிவிட்டன. ஆகவே இஸ்லாமிய புதிய சமூகத்தின் ஒவ்வொரு நபரும் தன் தன் இயற்கையான அறிவு சக்தி ஆகியவைகளுக்கேற்றவாறு பெரும் பதவிகளை அடைந்துவிட்டனர்" என்று பிரசித்திபெற்ற சரித்திர ஆசிரியரான "கபன்" கூறியிருக்கின்றார்.

உஸ்வயெஹஸனு.

கெடுதிகள் தோற்றத்தில் எவ்வாறிருப்பினும் அக்கெடுதிகளை யகற்றி நல்லதைப் பாதுகாப்பதில் இடைவிடாது செய்துவரும் முயற்சியைச் சத்தியப் பிரசாரமென்று அழைக்கப்படுகின்றது. இப்பிரசாரத்தின் மூலமாய், முதலாவதாக தன்னையும், பிறகு தன் குடும்பத்தினரையும், அதன் பின் தன் இனத்தவர்களையும் அதன் பின்னர் தன் தொகுதியிலுள்ளவர்களையும், பிறகு உலக முழுவதையும் கெடுதியினின்றும் காப்பாற்றுவதே வரிசைக் கிரமமான சத்தியப் பிரசாரமாகும்.

உலகத்தின் கொள்கை, செய்கை, ஆகிய இரண்டையும் பற்றிய ஒவ்வொன்றையும் கவனித்து நன்மைக்கும் நல்வழிக்கும் இடையூறுகளையும் குறுக்கிடா வண்ணம் சதா பாதுகாத்துவருவது ஒவ்வொரு மனிதனுடையவும் கடமையே. உண்மைக்கும், நியாயத்திற்கும் விரோதமாய் நடைபெறுபவைகளை தன் கை, நா முதலிய எல்லா சக்திகளோடும் அகற்றி விடுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். ஏனெனில்? அல்லாஹுதஆலாவின் பூமியில் உண்மையைக் காக்கும் பொறுப்பு மனிதனைச் சார்ந்ததாகவே யிருக்கின்றது. நீதி நழுவிவிடாமல் பாதுகாக்கவும், கெடுதியின் விருக்ஷம் ஓங்கிவளராமல் தடுக்கவும் அல்லாஹுதஆலா மனிதர்களையே நியமித்திருக்கின்றான்.

"ஜிஹாதே இஸ்லாம்" என்பது மேற் கூறப்பட்டுள்ள சத்தியப் பிரசாரத்தின் அஸ்திவாரமேயாகும். நல்லதை ஏவிக் கெடுதியை யகற்றுவது என்பதும் சத்தியப்பிரசாரத்தின் ஒரு பெயரேயாகும். "நல்லதை ஏவி கெடுதியை யகற்றுகிறவர்களாக விருப்பதால் மனிதர்களுள் நீங்களே உத்தமமானவர்கள்" என்று அல்லாஹுதஆலா

முஸ்லிம்களை நோக்கி கூறுவதிலிருந்து நல்லதை ஏவி கெடுதியை யகற்றும் பொறுப்பு முஸ்லிம்களுக்கே உள்ளதென்று நிதர்ஸனமாகி விடுகின்றது. சென்ற சஞ்சிகைகளில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், சத்தியப்பிரசாரகர்கள் என்ற தோரணை யில் நல்லதை ஏவி கெடுதியை யகற்றியது சம்மந்தமான சில விஷ யங்களை வரைந்துள்ளோம். ஏனெனில்? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நல்லதை ஏவி கெடுதியை யகற்றுவதை யொட்டி செய்த காரியங்களை நம்மவர்கள் அறிந்துகொள்ள வேண்டு மென்பதற்காகவே.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் நெருங் கிப் பழகி பல அரிய விஷயங்களைக் கற்றுணர்ந்து கீர்த்தி வாய்ந்த சஹாபாக்கள் நல்லதை ஏவி கெடுதியை யகற்றுவதை யொட்டி செய்த காரியங்களுள் சிலவற்றை விளக்கிக் காட்டுவதும் அவசியமெனக் கருதியே இவ்வியாசத்தை எழுத முன் வந்தோம். புகழுக்குரிய சஹாபாக்கள் நல்லதை ஏவி கெடுதியை யகற்றுவதற்காக செய்த காரியங்கள் முழுவதையும் வரைய முடியாதென்பதை நாம் கூற வேண்டுவதில்லை.

சரித்திரம் வரைந்துள்ள வரிசைக்கிரமப்படி முதலாவதாக ஹஜ் ரத் அபூபக்கர் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் அரிய பிரசாரம் சம்மந்தமானவைகளுள் சிலவற்றை அடியில் வரைகின் றோம்.

அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிரசாரம்.

அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாம் உதயமாவதற்கு முன்னும் இயற்கையிலேயே நல்லதை ஏவி கெடுதியை யகற்றுவதென்னும் தீ ஹிருதயத்திலுள்ளவர்களா யிருந்தார்கள். ஹிருதயத்துள் மறைந்திருந்த அத்தீயை இஸ்லாம் ஜ்வாலை விட்டெரி யும்படிச் செய்துவிட்டது. ஆகவே அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாமைத் தழுவிய மாத்திரத்தில் நல்லதை ஏவிக் கெடுதியை யகற்றும் சத்தியப்பிரசாரகருள் அபூபக்கர்சித்தீக் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் மிகவும் சிரேஷ்டமானவர்களென் னும் கீர்த்திக்குரியவர்களாக விருந்தார்கள்.

தன்னைச் சீர்திருத்துவது

ஒவ்வொரு சீர்திருத்தக்காரர்களும் முதலாவதாகத் தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்ற சித்தாந்தத்தின்படி அபூபக்கர் சித்

தீக் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் தங்களை திருத்திக்கொள்ளும் பொட்டு செய்த காரியங்கள் சாமான்யமானவையன்று. அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களுக்கு அவர்களினடிமை ஏதோ சில பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்தார். அதை சித்தீக் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் தங்களின் சொந்தத்திற் காகச் செலவு செய்துகொண்டார்கள். பிறகு அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களைப் பார்த்து "நான் தங்களி டம் கொடுத்த பொருள் எப்படிப்பட்ட தென்பதை தாங்களறிவீர் களா?" என்று அடிமை கேட்டார். அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் "அதை நானறியேன்", என்றார்கள். அப்பொ ழுது, "இஸ்லாம் உதயமாவதற்கு முன்னுள்ள மடமையின் காலத்தில் ஜோதிடக் காரனைப்போல் அந்தரங்கமானவைகளை வெளியிட்டுச் சொல்லி ஜனங்களை ஏமாற்றிவந்தேன். அக்காலத்தில் நான் கூறிய ஜோதிடத்திற்கு இன்று ஒருவர் கூலி கொடுத்தார் அதைத் தாங்கள் செலவு செய்து கொண்டீர்கள்," என்று கூறினார்.

அவ்வடிமை கொடுத்த பணத்தை செலவு செய்து தயாரிக்கப் பட்டிருந்த பதார்த்தத்திலிருந்து கிஞ்சிற்றை சித்தீக்ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் உட்கொண்டிருந்தார்கள். ஆகவே அடிமையின் இவ்வார்த்தையை செவியுற்றதும் அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் பதற்றினவர்களாய் தங்களின் விரல்களை தொண் டையிலிட்டு உட்கொண்டிருந்தவைகளை வாந்தி எடுத்து விட்டார்கள். (புகாரீ)

குடும்ப சீர்திருத்தம்.

சத்தியப்பிரசாரகர்கள் தங்களை சீர்திருத்துவதற்காகச் செய்ய வேண்டியவைகளுக்குப்பின் தன் குடும்பத்தைச் சீர்திருத்தவேண்டிய காரியம் முற்படுகின்றது. ஆகவே ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் இக்கடமையை நிறைவேற்றுவதற்கு மிகவும் சிர மம் எடுத்துக் கொள்ளுகிறவர்களாக விருந்தார்கள்.

"எனக்குக் கருத்துத்தெரிந்ததும் எங்கள் வீடு முஸ்லிம்களின் வீடாகவே எனக் குக்கிடைத்தது" என்று ஆயிஷா ரலியல்லாஹூ அன்ஹா அவர்கள் அருளியிருக்கின்றார்கள். அஃதாவது ஆயிஷா ரலியல்லாஹூ அன்ஹா அவர்களுக்குக் கருத்துத் தெரிவதற்கு முன்பே அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹூ அன்ஹா அவர்கள் வீட்டில் எல்லோரும் இஸ்லாம்மதத்தைத் தழுவிவிட்டார்கள். இதற்குக் கார

ணம் அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் உபதேசமென்னும் சத்தியப்பிரசாரமே காரணமென்பது திண்ணம்.

ஒருவர் அல்லது இருவர் இஸ்லாமைத் தழுவியும் மற்றவர்கள் இஸ்லாமைத் தழுவாமலுமுள்ள குடும்பங்கள்பல விருந்தகாலத்தில் அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டில் எல்லோரும் இஸ்லாம் மதத்தைத் தழுவிவிட்டது ஆச்சரியமே.

ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விவாகம்செய்து கொண்டு விட்டதால் நாயகமவர்களின் போஷணைக்குட்பட்டிருந்த ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உபதேசம் செய்யவேண்டிய அவசியமில்லாதிருந்துங்கூட ஆயிஷாரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஏதேனும் தவறிழைத்தால் உடனே அவர்களை அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மிகவும் கண்டிப்பான முறையில் எச்சரிப்பவர்களாக விருந்தார்ாள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஏதோ ஓர் பிரையாணத்தில் நாயகமவர்களோடு, ஆயிஷாரலியல்லாஹு அன்ஹா அவர்களும் சென்றிருந்தார்கள். அப்பொழுது ஆயிஷாரலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஒரு மாலை கை தவறிவிட்டது. அம்மாலையைத் தேடி எடுப்பதற்காக நாயகமவர்களும் மற்ற ஸஹாபாக்களும் தங்கிவிட்டார்கள். தொழுவதற்கு அவ்விடத்தில் ஜலத்திற்கேதும் வசதியில்லாமலிருந்தது. இதையொட்டி ஸஹாபாக்கள் அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் முறையிட்டுக்கொண்டார்கள். 'அவ்வமயம் நாயகமவர்கள் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் தொடையில் சிறசைவைத்தவர்களாய் தூங்கிக்கொண்டிருந்ததையும் கவனியாமல் அபூபக்கர் சித்தீக்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஆயிஷாரலியல்லாஹு அன்ஹா அவர்களைப் பார்த்து, "உன் மாலைக்காக மற்றெல்லோரையும் இக்கஷ்டத்திற்காளாக்கிவிட்டாயே!" என்று உரத்துக்கூறி கண்டனஞ் செய்தார்கள். அதே சமயத்தில்தான், "தயம்மம்" சம்மந்தமான ஆயத்து இரங்கிற்று.

சமூக சீர்திருத்தம்

தைரியம், உறுதி முதலியவைகளுள் பெயர்பெற்ற உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுங்கூட தைரியத்தையிழந்து பதறி நின்ற சோதனைக்குரிய நெருக்கடியான காலத்தில் சமூகத்தைப் பாதுகாக்கும்

பொறுப்பை அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏற்றிருந்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விண்ணுலகை அடைந்தபோது இஸ்லாம் மிகவும் ஆபத்தான நிலைமையில் சிக்குண்டு விட்டது. எதிரிகளின்உள்ளத்தில் மறைந்துகிடந்த பகைமை வெளிக்கிளம்பிவிட்டது. தைரியம் பொருமை ஆகியவைகளால் இஸ்லாமின் கடமைகளை நிறைவேற்றி வைக்காவிடின் எதிரிகள் தங்களின் பழைய குரோதங்களை வெளியிட்டு இஸ்லாமுக்கு விரோதமாய்த் தாங்கள் உத்தேசித்திருந்தவாறு காரியங்களைச் செய்ய முற்பட்டு விடுவார்கள் என்பதை அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தவிர வேறு எவரும் உணர்ந்திருக்கவில்லை. உலகத்தைப் படைத்து இரக்ஷித்துவருகின்ற அல்லாஹுதஆலாவுக்கு மிகவும் உவப்பான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்களை விட்டுப்பிரிவதை யறிந்த ஸஹாபாக்கள் கவலைமேலிட்டு ஸ்மரணையற்றவர்களா யிருந்தனர். விசேஷ கலக்கத்திற் குரிய அச்சந்தர்ப்பத்தில் தைரியமாய் வேலைசெய்யத்தகுந்த மூளை அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில்மட்டுமே யிருந்தது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின்மீது அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கிருந்து வந்த பக்தி, சிரத்தை, விசுவாசம் முதலியவைகள் காரணமாக நாயகமவர்களின் பூழுதேகத்தையும் முத்தமிட்டிருக்கிருர்கள். ஆயினும் நாயகமவர்கள் விண்ணுலகை யடைந்ததும் இஸ்லாமைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு மிகப் பெரிதாகவிருந்தது. ஆகவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை யடக்கஞ் செய்வதற்குமுன் சஹாபாக்களின் மத்தியில் அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விஜயஞ் செய்தார்கள். அப்பொழுது ஹஸரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமாதானமற்றவர்களாய் ஸஹாபாக்களை நோக்கி எதையோ புலம்பிக்கொண்டிருந்தார்கள். இதைக் கண்ணுற்ற அபூபக்கர்சித்தீக் ரலியல்லாஹுஅன்ஹுஅவர்கள், ஹஸரத் உமர்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்வண்ணம் புலம்பாதிருக்கும்படி இருமுறை தடுத்தும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸஹிக்க முடியாதவர்களாய் புலம்பிய வண்ணமாக விருந்தார்கள். உடனே அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸஹாபாக்களைநோக்கி, " உங்களுள் எவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களை பூஜித்து வந்தார்களோ அவர்கள் அறிந்துகொள்ள வேண்டியது என்னவெனில்? இப்பொ

முது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் விண்ணு லகை அடைந்துவிட்டதால் அன்னவர்களின் இஸ்லாமும் ஒழிந்துவிட்டது. ஆனால் உங்களுள் எவர் அல்லாஹுதஆலாவை வணங்குகிற வர்களாக விருந்தனரோ அவர்கள் வைக்கவேண்டிய நம்பிக்கை என்ன வெனின்? அவர்களுடைய நாயன் இன்னமும் ஜீவித்திருக்கின்றான். அவனுக்கு மரணமே கிடையாது. முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு முன் தோன்றி தங்களின் நபித்துவத்தின் கடமைகளை நிறைவேற்றி விட்டு விண்ணுலகை அடைந்தவர்களைப் போல் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ்ஸல்லமவர்களும் ஒரு நபிதானென்று அல்லாஹுத ஆலா அருளி யிருக்கின்கிறான்'' என்னும் இவ்வரிய பிரசங்கத்தை வெகு கம்பீரமான தொனியில் புரிந்து ஸஹாபாக்களுக்கு சாந்தியை யுண்டு பண்ணினார்கள்.

(தொடரும்)

மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ பொய்யரல்லவா?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் விண்ணுலகை அடைந்தது முதல் இன்றுவரை, அஃதாவது பதின்மூன்றரை நூற்றாண்டுகளாக நடந்தேறியதும் நடைபெற்றுவருவதுமான காரியங்களையும், உலகம் முடிவுவரை நிகழக்கூடியவைகளையும், அநேகமாய் நாயகமவர்கள் ஏற்கனவே அறிவித்திருக்கின்றார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அறிவித்தவைகளுள் சில சந்தோஷகரமானதாயும் மற்றும் சில பயங்கரமானதாயுமுள்ளன. கிஸ்ராவின் பொக்கிஷத்தை முஸ்லிம்கள் திறப்பார்களென்றும், எமனிலிருந்து ''ஹலரமௌத்'' வரையில் இஸ்லாம் பரவிவிடுமென்றும் அறிவித்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்வர்கள் கியாமநாள்வரை நிகழக்கூடிய துக்ககரமான காரியங்களையும் அறிவித்துவிட்டார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அறிவித்தவைகளுள் சந்தோஷகரமான செய்திகள் பூர்த்தியடைவதைக் கண்டு ஆனந்தித்த நேத்திரங்களை யுடையவர்கள் பெரும் பாக்கியவான்கள் என்பதில் சந்தேகமுண்டோ? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அறிவித்தவைகளுள் துக்ககரமான கொடிய காரியங்கள் இன்று நிகழ்ந்து வருவதைக்கண்டு சங்கடப்படும் நேத்திரங்களையுடைய நாம் துரதிர்ஷ்டர்களென்று கூறவும் வேண்டுமா?

"நவீன முறையைக்கொண்ட அறிவில் குறைந்த ஒரு வகுப்பார் கடைசிக்காலத்தில் தோன்றுவார்கள். தோற்றத்தில் அவர்களின் வார்த்தைகள் நல்லவர்களின் வார்த்தைகளைப் போலிருக்கலாம். அவர்கள் குர்ஆன்ஷரீபை ஓதுவார்கள். ஆயினும் ஈமான் அவர்களின் தொண்டைக் குழிக்குள்ளே செல்லாது. வேட்டைக்குரிய பிராணியின் தேகத்தில் பாய்ந்துசென்றுவிடும் அம்பைப்போல் அன்னவர்கள் தீனை விட்டு வெளியேகிவிடுவார்கள்" என்று நம் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

"சிலர் தாங்கள் பெரும் அறிவையுடையவரென்ற மமதையைக் கொண்டு தாங்கள் "பலாஸிபிகள்" என்றும் "ஹுகமாக்கள்" என்றும் கூறுவார்கள். அன்னவர்கள் மதசம்மந்தமான வரம்புகளை முறித்து தங்களின் அஞ்ஞானக் கொள்கையையும் பலாசிபாவையும் மார்க்கப் போர்வையால் மறைத்து ஜனங்களை வழிகெடுப்பார்கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பல ஹதீதுகள் கூறுகின்றன.

* * *

எமக்குப்பின் நபிகள் வருவதில்லையென்னும் உண்மைக்கு மாறாக தங்களை நபியென்று கூறும் முப்பது பொய்யர்கள் அவசியம் தோன்றுவார்கள் என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். நாயகமவர்கள் அறிவித்த முப்பது பொய்யர்களுள் மிர்ஸா குலாம்அஹ்மத் காதியானியும் ஒருவராவர். நபித்துவத்தின் வாயில் அடைக்கப்படவில்லையென்று மிகவும் தெளிவாகப் பகர்ந்து மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மதத்தை புதிப்பிப்பதற்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் நியமிக்கப் பட்டதைப்போல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் போதனையைப் பிரசாரம் செய்யும்பொருட்டு தம்மை அல்லாஹுதஆலா நியமித்திருப்பதாய்க் கூறியிருக்கின்றார். மதத்திற்கும் அரசாக்ஷிக்கும் மத்தியில் எவ்வித சம்பந்தமு மில்லையென்று காட்டி அரசாங்கத்தையும் மதத்தையும் பிரித்துவைப்பதிலேயே மிர்ஸாசாஹிப் தன் திறமையைச் செலவிட்டிருக்கின்றார். இஸ்லாமுக்கு அரசாக்ஷியே அவசியமில்லையென்றும் முஸ்லிம்கள் ஜிஹாத்செய்தது ஹராம் என்றும், முற்காலத்து முஸ்லிம்கள் ஜிஹாத்செய்வது உண்மையாயினும் அதை நான் எக்காலத்திற்கும் ஹராமாக்கிவிட்டேன் என்றும் மிர்ஸா ஸாஹிப் கூறியிருக்கின்றார். முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு பணிந்திருப்பதிலேயே (முஸ்லிம்களுக்கு) நன்மை

யுண்டென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கட்டுப்படுவது அல்லா ஹுத ஆலாவுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கும் கட்டுப்படுவதன் ஒருபாகமென்றும் மிர்ஸாஸாஹிப் உபதேசித்திருக்கின்றார். அன்றியும் தயவுநிறைந்த இந்நல்ல அரசாங்கத்திற்கு விரோதமாய் வஞ்சகம், பொறாமை, கோபம், கெட்ட எண்ணம் முதலியவைகளைக் கொள்ளுகிறவர்கள் என்கூட்டத்தை விட்டு அப்புறப்பட்டவர்களென்று மிஸ்ஸாஸாஹிப் தன் உம்மத்திற்கு "வசிய்யத்து" செய்துமிருக்கின்றார். மிர்ஸா குலாம் அஹ்மத்ஸாஹிப் காதியானீ தன் முழுவாழ்நாளையும் பிரிட்டிஷாரின் விசுவாசத்திலேயே கழித்தார். பிரிட்டிஷாரின் விசுவாஸத்தின் அடிப்படையைக் கொண்டே மிர்ஸா ஸாஹிப் அஹ்மதியாக் கொள்கையை ஸ்தாபித்திருக்கின்றார். ஆனது பற்றியே பிரிட்டிஷாரைச் சந்தோஷப்படுத்தக் கருதி அஹ்மதியா வகுப்பார் இஸ்லாமிய உலகத்திற்கு விரோதமாய் விசேஷ ஆர்ப்பாடத்தோடு ஆச்சரியப்படத்தக்க விதமாய்க் கிளர்ச்சியும் பிரசாரமும் புரிந்துவந்தார்கள்.

* * * * * * *

மிர்ஸாகுலாம் அஹ்மத்ஸாஹிபை நபியென்று ஒப்புக்கொள்ளாதவர்களெல்லாம் காபர்களென்று காதியானிகள் கூறுகின்றனர். சில இலக்ஷம் நபர்கள் தவிர மற்ற முஸ்லிம் உலகம் முழுவதும் காபர்களெனக் காதியானிகள் தீர்மானித்திருப்பதினாலேயே கிலாபத்தியக்கம் இஸ்லாமிய ஐக்கியம் ஆகியவைகள் சம்மந்தமான நடவடிக்கைகளை விட்டு அவர்கள் ஒதுங்கி நிற்கின்றனர். அன்றியும், முஸ்லிம் உலகத்தின் எம்முயற்சியையும் கண்டு அன்னவர்களால் சஹித்திருக்கக் கூடவில்லை. காதியானிகளின் சூழ்ச்சிக்கு இரையாகாமல் தப்பிவந்த ஆப்கனும் இன்று காதியானிகளின் சூழ்ச்சிக்கு இலக்காகி நிற்கின்றது. ஆப்கனின் சமாதானத்தைப் பங்கப்படுத்துவதற்குக் காதியானிகள் முயன்றுவிட்டனர். ஆப்கனில் காதியானிகளைக் கல்லெறிந்து கொல்லுவதற்குக் காதியானிகளின் அருவருக்கத்தக்க சேஷ்டைகளே காரணமென்பதை மறுக்கமுடியாது.

காதியானியை ஆப்கன் கொன்றுவிட்டதை யொட்டி காதியானி வகுப்பார் அடையும் ஆத்திரத்துக்கு எல்லையேயில்லை. நியமத்துல்லாகானை ஆப்கனில் கொன்றுவிட்டதைப்பற்றி காதியானிகள் பிரிட்டிஷாரிடத்தில் முறையிட்டுக் கொண்டார்களல்லவா? அடிமைகளுக்குக் கஷ்டமேற்படும்போது அவ்வடிமை தன் எஜமானனுடைய வாசற்படியில் சிரசைவைத்துக் கெஞ்சுவது சகஜமே.

* * * *

அஹ்மதியாக்கள் ஜனங்களுக்கு உபதேசிப்பதைப்போல், இஸ்லாம் மதத்தையும் அரசாங்கத்தையும் தனித்தனியே பிரித்துவிடவில்லை. சந்தேகமின்றி சாஸ்திரமே அரசாங்கமுமாகும். இஸ்லாம் அல்லாத அரசாங்கம் இயற்றும் சட்டங்களை அவ்வரசாங்கம் நிறைவேற்றி வைப்பதோடு அதற்கு விரோதமாக உள்ளவர்களை சிக்ஷிப்பதைப்போலவே முஸ்லிம்களின் அரசாங்கம் இஸ்லாமிய சட்டதிட்டங்களை நிறைவேற்றி நல்லதை ஏவிக் கெடுதிகளை யகற்றவும் கடமைப் பட்டிருக்கின்றது.

குர்ஆன் ஹதீது ஆகியவைகளின் உத்திரவுகளுக்கு விரோதமாய் நடப்பவர்களை முஸ்லிம் அரசாங்கம் சிக்ஷிக்கவும் கடமைப்பட்டிருக்கவில்லையா?

* * * *

தாங்களே அறிவிற் சிறந்தவர்களெனக் கூறி பெருமை பாராட்டும் அறிவில்லாதவர்கள் மார்க்க சம்மந்தமான நடவடிக்கை, கொள்கை முதலியவைகளை இழித்துக் கூறி இஸ்லாமிய ஷரீஅத்தின் ஐக்கியத்தைக் கெடுத்து வருகின்றனர். இக்கொடியவர்கள் நல்ல உலமாக்களை நிந்திக்கப் பின்வாங்குவதுமில்லை. இவர்கள் உலமாக்களின் சபையை முட்டாள்களின் சபையென்றும் கூறத் துணிந்துவிட்டனர்.

இத்துணை கொடிய காரியங்களையும் புரிய முன் வந்திருக்கும் துஷ்டர்கள் உண்மையில் இஸ்லாமுக்குள் பல புதிய சங்கடங்களை இழைக்க கங்கணம் கட்டிவிட்டனர். ஆனதுபற்றியே, இக்கொடியவர்களால் இழைக்கப்படும் இடையூறுகளை யொழிப்பதற்காக உலமாக்கள் நல்லஊழியம் புரிந்துவருகின்றனர். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் உத்தமர்களான ஆலிம்கள் தங்கள் கடமையைச் செய்யாது தூங்கியிருப்பார்களாயின் இதுவரை அக்கொடியவர்கள் இஸ்லாமை பலதுறைகளிலும் புரட்டியிருப்பார்கள். பாபீ, பஹாயி, மிர்ஸாயி, அஹமதீ ஆகிய கெட்ட கொள்கைக்காரர்களின் சேஷ்டையை உலமாக்கள் கண்டித்து விரட்டாதிருந்திருப்பார்களாயின் இன்றுமுஸ்லிம் உலகத்தை இவ்வெளிய ஸ்திதியிலேனும் கண்டுபிடிக்க இயலாது.

(சூபி)

கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அஹ்மதியரே.

(172-வது பக்கத் தொடர்ச்சி.)

A. இன்னும் மற்ற வெளியீடுகளும் அதி துரிதமாய் வெளியிடும்படி அன்னவருக்குப் பண உதவியோ, மனித உதவியோ செய்வதோடு அதிகமான ஊக்கத்தையும் அவர்பால் அருளவேண்டும்.

B. கனம். பா. தாவுத்ஷா ஸாகிப் மனித உதவியைக் கோராதவரென்று பறைசாற்றிக்கொண்டே அன்னவருக்கு மனித உதவி வேண்டுமென நிரூப மெழுதியவர் கோருவது வேடிக்கையா யிருக்கின்றது.

முகம்மதுஅலி எம். ஏ. காஜா கமாலுத்தீன், ஷாஸாஹிப் முதலிய காதியானிகளின் கொள்கைக்கும் சுன்னத் வல்ஜமா அத்து முஸ்லிம்களின் கொள்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசங்களை தென்னாட்டு முஸ்லிம்கள் அறியா திருந்த காலை, முகம்மது அலி எம். ஏ. (சுன்னத் வல்ஜமாஅத்து முஸ்லிம்களின் நம்பிக்கைகளுக்கு விரோதமாய்), குர்ஆன் ஷரீபுக்கு ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் வியாக்கியானத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் உரிமை தமக்கே உண்டென்று கூறி முஸ்லிம்களிடத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்களைப்பெற்று அத்தொகையை செலவிட்டே ஜவாஹிருல் புர்கான் ஒன்று இரண்டு வெளியீடுகளை அச்சிட்டு விற்பனை செய்து பெரும் லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிற கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்களுக்கு சுன்னத் வல்ஜமா அத்து முஸ்லிம்கள் இன்னும் பொருளுதவி செய்து முன் போல் ஏமாந்து போகமாட்டார்கள் என்பதை நிரூப மெழுதியவர் உணரவேண்டும். கனம் பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் மஜ்லிசுல் உலமாவுக்கும் (சுன்னத்து வல்ஜமா அத்து) ஆலிம்களுக்கும் கட்டுப் படாதவரென்று பகர வெட்கப்படாதிருக்கும் ஸ்திதியில் அன்னவருக்கு நிரூப மெழுதியவர் மனித சகாயத்தைக் கோருவதேனோ?

A. அஃதின்றி நீங்கள் அன்னவரை பொறாமையின் காரணமாகச் செய்துவரும் சூட்சிகளும் தூஷணங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தொளித்தோடுகின்றன.

B. அறியாமையின் அந்தகாரத்தில் மூழ்கி உத்தமர்களைப் பொறாமைக்காரர்களெனப் பிதற்றிய குற்றத்திற்குத் தாம் சிக்ஷிக்கப் படப் போவதை யறிந்து சிங்கைநகரில் சூரியனைக் கண்ட பனிபோல்

பறந்தொளித்தோடுவதை அந்நகரில் வசிப்பவர்கள் நன்கறிவார்கள். அந்நகரிலுள்ள மஸ்ஜிதுகளில் சுன்னத்து வல்ஜமாஅத்து மௌல்விகள் தங்களின் பிரசங்கத்திலேயே கனம். பா. தாவுத்ஷாஸாஹிப் அவர்களைப் பகிரங்கமாக கூவி அழைக்கும்போழ்து அன்னவர் வெளி வராதிருப்பதேனோ?

A. உங்களெல்லீருக்கும் தன சகாயமும் மனித சகாயமுமிருந்தால் நம் ஜனுப் ஷா ஸாஹிபுக்கு "லத்தீப்" தான் உதவியாக விருக்கின்றான்.

B. கனம் ஷா ஸாஹிபுக்கு லத்தீபுடைய உதவியும் மற்றெல்லோருக்கும் மனிதசகாயம் தனசகாயம் ஆகியவைகள் இருப்பதாயும் நிரூபமெழுதியவர் பிதற்றுகிறார். தனசகாயத்தையும் மனித சகாயத்தையும் பெற்றிருப்பவர்களுக்கு லத்தீபுடைய சகாயம் இல்லையென்றும், லத்தீபுடைய சகாயத்தைப் பெற்றிருப்போருக்கு மனித சகாயமும் தனசகாயமும் இல்லையென்றும் நிரூபமெழுதியவர் கருதுகிறார்போலும்! லத்தீபுடைய சகாயத்தைப் பெற்றிருக்கும் ஷா ஸாஹிப்பின் சகாயத்தைக் கோராதவர்களின் வாசலில் அன்னார்களின் சகாயத்தைக் கோறிப் பிச்சை கேட்பதேனோ?

கனம் ஷா ஸாஹிபு முஸ்லிமென்ற தோலைப் போர்த்துக்கொண்டு முஸ்லிம் உலகத்திற்குச் செய்துகொண்டிருக்கும் கொடிய சூழ்ச்சிகளை பகிரங்கமாய் நிரூபிக்கும்பொருட்டு அன்னவர் அழைக்கப்படும்போது (சிங்கை நகர்) சுண்ணும்பு கம்பத்தில் ஒளித்துக்கொண்டிருக்கவும் மனித சகாயத்தைக் கோரவில்லையா?

A. அன்னவர் ஆண்டவனைத்தவிர மற்றும் யாரையும் உதவிக்கழைக்கவில்லை.

B. நிரூபர் இவ்வாறு கூறுவதுண்மையாயின் இவர் ஆண்டவனின் வீடாகிய மஸ்ஜிதுகளுக்கு வர பயப்படுவதேன்.

A. அவன் நாடுவானுகில் அரைக்ஷணத்தில் நடைபெற்று விடுமென்பதே அவரின் சித்தாந்தம்.

B. நிரூபமெழுதியவர் கூறுவதுபோன்ற நம்பிக்கை ஷா ஸாஹிபுக்கிருக்குமாயின் இவர் பகிரங்கமாக வெளியில் வந்து உலமாக்களிடத்தில் சம்பாஷிக்கப் பின்வாங்கமாட்டார்.

A. பொறுமையின் காரணமாகப் போலிப் பிரசாரங்களால் செய்யப்படும் எதிர்ப்பிரசாரத்தைப்பற்றி அன்னவர் ஒன்றும் மனக்கிலேசமடையவில்லை.

B. சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிம்கள், தங்களின் நேரான கொள்கைக்கு விரோதமான அஹ்மதியாக்களின் கொள்கையை லாஹூர் அஹ்மதியா பார்ட்டிகளிடத்தில் தன சகாயம் பெற்று ஷா ஸாஹிப் செய்யும் போலிப் பிரசாரத்தை (பொறுமையின்றியே) யொழித்துவிடுவதற்காக வெளிக்கிளம்பி விட்டனர் என்பதை நிரூபமெழுதியவர் அறியவேண்டும். இதற்காக கனம். ஷா ஸாஹிபு அவர்கள் அடைந்திருக்கும் மனக்கிலேசத்தை தமிழ்நாடு முழுதும் நன்கறியும்.

A. ஆனால் நீங்கள் செய்யும் எதிர்ப்பிரசாரத்தினால் ஜனாப் ஷாஸாஹிபுக்கு மேன்மேலும் ஊக்கமும் விடா முயற்சியும் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டே வருகின்றன.

B. நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லமவர்கள், இஸ்லாம் ஏற்றுக்கொள்ளாதவைகளை யொழிப்பதற்காகச் செய்த பிரசாரத்தால் அபூஜஹ்ல் முதலிய துஷ்டர்களுக்கு மென்மேலும் ஊக்கமும் விடா முயற்சியும் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டே யிருந்ததை சரித்திர வாயிலாய் அறிந்த முஸ்லிம்கள், ஷா ஸாஹிபுக்குண்டாகும் கெட்ட ஊக்கத்தைக் கண்டு ஆச்சரியப்படப்போவதில்லை.

A. நுங்களைப்போல் மஜ்லிசுல் உலமாவுக்காவது மற்ற ஆலிம்களுக்காவது அன்னவர் அடிபணிந்து நடக்கவில்லை.

B. ஆலிம்கள் நபிமார்களின் வார்ஸுகளென்று நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லவர்கள் அருளியிருக்கும் நாயகவாக்கியத்தை ஜனாப் ஷா. ஸாகிப் அவர்கள் அறிந்திருந்தால் ஆலிம்களுக்கும், ஆலிம்களின் சபைகளுக்கும் அன்னவர் நுங்களைப்போல் (அஃதாவது முஸ்லிம்களைப்போல்) கட்டுப்பட்டவரல்லவென்று கூற ஷா சாஹிப் வெட்கப்படவேண்டும் என்பதை நிரூபமெழுதியவர் தெரிந்து கொள்ளவில்லை போலும்!

A. ஆனால் அல்லாஹ் ஒருவன் உண்டென்றும், அவனுடைய உண்மை ரசூல் முகம்மது ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் ஆண்டவனின் கடைசித் தூதரென்றும் இன்னும் இஸ்லாத்திலுள்ள மற்ற அம்சங்களையும் நுங்களைப் பார்க்கிலும் ஒரு அணுப்பிரமாணம் அதிகமாகவே அன்னார் இஸ்லாம் மார்க்கத்தை அறிந்திருக்கிறார் என்பதைத் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இன்றேல் நீங்கள் சருகுதலான வழியில் சென்றுகொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

B. இந்நாட்டிலுள்ள சுன்னத்து வல்ஜமாஅத்து முஸ்லிம்களைக் காட்டிலும் அஹ்மதியாக் கொள்கையை அன்னவர் அதிகம் அறிந்திருப்பதாகக் கூறின் அதை நான் ஆக்ஷேபிக்கத் தயாராயில்லை.

தென்னாட்டு முஸ்லிம்களைக் காட்டிலும் சுன்னத்துவல்ஜமாஅத்து கொள்கையை ஷா ஸாஹிபு அதிகம் அறிந்திருப்பாராயின் இலங்கா கப்பலில் ஜும்ஆ தொழுததாய் பறைசாற்றி வெட்கப்பட்டிருப்பாரல்லவா? சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிம்களின் கொள்கையை கனம் ஷா ஸாஹிப் அறிந்தவராயின் கப்பலில் ஜும்ஆ தொழுதிருப்பாரா? ஜனாப் ஷா ஸாஹிப் இஸ்லாமை அறிந்தவராயின் கப்பலில் ஜும்ஆ தொழுததை யொட்டி பகிரங்கமாய்க் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமல் மௌனஞ் சாதிப்பாரா? ஜும்ஆ தொழுகை கடமையாவதற்குள்ள நிபந்தனைகளையும் அத்தொழுகை நிறைவேறுவதற்கான அம்சங்களைக்கூட தெரிந்துகொள்ளத் தகுந்த அறிவும் ஆற்றலுமில்லாது கப்பலில் ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றி விட்டதாய்க் கூறும் கனம் ஷா ஸாஹிபு அவர்கள் ஒரு கால் முஸ்லிம் அல்லாதவர்களைக் காட்டிலும் இஸ்லாமை அதிகம் அறிந்திருக்கலாம்.

முஸ்லிமல்லாதவர்களைக் காட்டிலும் ஷா ஸாஹிப் இஸ்லாமை அதிகம் அறிந்தவராயின் இஸ்லாம் சம்மந்தமாக இவர் இயற்றியதாகக் கூறும் புஸ்தகங்களுக்கு முஸ்லிமல்லாதவர்கள் எழுதிய மதிப்புரையை தாருல் இஸ்லாமில் அச்சிட்டு பகிரங்கப்படுத்தி புகழைப் பெற முன் வந்திருக்கமாட்டார்.

உண்மை இவ்வாறிருக்க ஷா ஸாஹிபு அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை அதிகமாக அறிந்தவரென்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளாதவர்கள் சருகுதலான வழியில் சென்று கொண்டிருப்பதாய்ப் பிதற்றும் நிரூப மெழுதியவர் ஞான முள்ளவரா?

A. கனவிலும் நினையாத தமிழுலகம் "ஜவாஹிருல் புர்கான்" என்னும் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புக்காக உதவி செய்ய முன் வரமாட்டீர்களா? அஃதின்றேல் இன்னும் நீங்கள் தீக்ஷண்ணியத்தை யடையவில்லை யென்றே நான் அபிப்பிராயப்படுகிறேன்.

B. பகவத்கீதை சமஸ்கிருத பாஷையில் இருந்துவருகிறது. இதை "ஆரிய சமாஜம்" என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இந்து மதக்கொள்கைக்கு விரோதமாய் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் இம்மொழி பெயர்ப்பை வைதீக இந்துக்கள் ஏற்றுக் கொள்ளு

வார்களா? இவ்வாங்கில மொழி பெயர்ப்பை சமஸ்கிருத பாஷையை அறியாத மற்றொருவர் தமிழில் மொழிபெயர்க்க முன் வந்தால் அன்னவரை வைதீக இந்துக்கள் கண்டிக்காமல் இருப்பார்களா?

கீதைக்கு ஆரியசமாஜியால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பை சமஸ்கிருதமறியாத மற்றொரு ஆரியர் தமிழில் மொழி பெயர்த்திருப்பதைப் பாராட்டிவைதீக இந்துக்கள் மதிப்புரை எழுத மாட்டார்கள் என்பது உலகமறிந்ததே. இந்நிலைமையில் வைதீக இந்துக்களால் ஏற்றுக் கொள்ளப்படாததும் மறுக்கப்படுவதுமான தமிழ் மொழி பெயர்ப்பை மெச்சி முஸ்லிம்கள் எழுதும் மதிப்புரையைக் கண்டு வைதீக இந்துக்கள் ஆத்திரப்படமாட்டார்களா?

குர்ஆன் ஷரீபுக்கு முகம்மது அலி எம். ஏ. என்னும் அஹ்மதியரால் ஆங்கிலத்தில் வெளிபிடப்பட்ட மொழி பெயர்ப்பைக் கண்டு வைதீக முஸ்லிம்கள் ஆத்திரப்படுவதும் இம்மொழிபெயர்ப்பை, அரபி பாஷையை அறியாத கனம் பா. தாவுத்ஷா ஸாஹிப் என்னும் அஹ்தியர் தமிழில் மொழி பெயர்ப்பதை வைதீக முஸ்லிம்கள் கண்டிப்பதும் ஆச்சரியமா? வைதீக முஸ்லிம்களின் கண்டனத்துக் குரிய இத் தமிழ் மொழி பெயர்ப்பைப் பாராட்டி இந்துக்கள் மதிப்புரை எழுதியதை யொட்டி முஸ்லிம்கள் கொண்டிருக்கும் ஆத்திரத்தை இந்துக்கள் அறியாவிடினும், முஸ்லிம்கள் இதை மறந்துவிடமாட்டார்கள்.

அன்றியும் கனம். பா. தாவுத்ஷா சாஹிபின் சூழ்ச்சிக்குட்பட்டு குர்ஆன் ஷரீபுக்கு அஹ்மதியாக்கள் எழுதிய மொழிபெயர்ப்பிலிருந்து இரண்டு பிரதிகள் வெளியாவதற்கு உதவி செய்தவர்கள் இன்று தீக்ஷண்ய மடைந்துவிட்டதால் இன்னமும் ஏமாந்துபோகமாட்டார்களென்பது திண்ணம்.

A. இந்தியாவிலுள்ள தமிழ் முஸ்லிம்கள் ஏழு லக்ஷத்திற்கு அதிகமாகவிருந்தும் நாளது வரையில் ஒருவராவது குர்ஆனின் அர்த்தத்தைமட்டும் நம் செந்தமிழில் எல்லோரும் விளங்கும்படி வெளியிட முன் வந்துளரோ? நிதானித்துப்பாருங்கள்.

B. சுமார் 15 வருடங்களுக்குமுன் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து திருமறைப் பொக்கிஷம் என்னும் பெயரால், "அலீப் லாம் மீம்," "ஸயகூல்" "தில்கர்ருசுல்" ஆகிய மூன்று ஜுசுக்களையும் தனித்தனியே தமிழில் மொழிபெயர்த்து மூன்று வால்யூம் வெளி வந்திருக்கின்றன.

சுமார் 8 வருடங்களுக்குமுன், ஹிப்னுட்டிசம் முக்தி யடைவதற்குரியதென்னும் நம்பிக்கை யுடையவரும் அரபி பாஷையில் தேர்ச்சியில்லாதவரும், "அஜாயிபுல்ஆலம்" என்னும் மாதாந்த தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியருமான வழுத்தூர் மஷாயிக் முகம்மத் தாகிர் சாஹிப் அவர்கள் குர்ஆன்ஷரீபுக்கு உர்தூபாஷையில் செய்யப் பட்டிருக்கும் மொழி பெயர்ப்புகளிலிருந்து "அலீப் லாம் மீம்" "ஸயகூல்" ஆகிய இரண்டு ஜுசுக்களையும் தமிழில் மொழி பெயர்த்து தனித்தனியே இரண்டு பிரதிகளை வெளியிட்டிருந்ததோடு தில்க்கர்ருசுல் என்னும் ஜுசுவின் மொழி பெயர்ப்பு அச்சிலிருந்து வந்தது. இந்நிலைமையில் ராஜகிரி மத்ரஸயே காசிமியாவில் சைபுல் இஸ்லாம் ஆசிரியர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற மகா நாட்டில் "முகம்மத்தாகிர்ஸாஹிப் அவர்களால் வெளியிடப்படும் குர்ஆன் ஷரீப்த் தமிழ் மொழி பெயர்ப்பில் பல பிசகுகளிருந்து வருவதால் அதை முஸ்லிம்கள் வாங்கி வாசிக்கக்கூடாது" என்று அல்கலாம் ஆசிரியர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறியபின் ஜனாப் முஹம்மத்தாகிர்ஸாஹிப் அவர்களின் மொழிபெயர்ப்பு சம்பந்தமான காரியம் நின்றுவிட்டது.

சுமார் 50, 60 வருடங்களுக்கு முன் அரப் தமிழில் குர்ஆன் ஷரீபை மொழிபெயர்த்து விரிவான வியாக்கியானங்களோடு வெளிவந்த "பத்ஹுல்கரீம்" "பத்ஹுர்ரஹ்மான்" ஆகிய இரண்டும் தமிழ்நாடு முழுதும் பரவியிருக்கின்றன. இவைகள் தாருல் இஸ்லாம் ஆபீசிலும் இருந்து வருவதைத் தெரிந்துகொண்டிருக்கும் நிருபமெழுதியவர் நாளது வரையில் ஒருவராவது குர்ஆனின் அர்த்தத்தை மட்டும் நம் செந்தமிழில் எல்லோரும் விளங்கும்படி வெளியிட முன்வந்துளரோ என்பதை நீங்களே நிதானித்துப் பாருங்கள் என்று வரைந்திருப்பது நியாயமா?

A. 1300 ஆண்டுகளுக்கு முன்னுள்ள அராபியர்களுக்குமட்டுமா அந்தக் கடைசி வேதம் வெளியாக்கப்பட்டது? என்னே! நுங்களின் அறிவின் பெருமையே !! பெருமை !!!

B. ஒவ்வொரு முஸ்லிமும் குர்ஆன்ஷரீபை தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே இஸ்லாமின் உத்தரவாக விருக்கின்றது. ஆகவே முஸ்லிம்கள் எல்லோரும் அரபிபாஷையை அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியந்தான். அரபிபாஷையை அறியாதவர்கள் குர்ஆன் ஷரீபை உண்மையாகவே அறிந்துகொள்ளுவது அநேகமாய் முடியாத காரியமே. ஆயினும் அரபிபாஷையை அறியாதவர்கள் ஒருவாறு குர்

ஆன்ஷரீபை அறியும்பொருட்டு இதர பாஷைகளில் மொழி பெயர்ப்பது நன்மையைப் பயக்கும் என்பதும் உண்மையே. ஆனால் அரபி பாஷையை அறியாதவர்கள் குர்ஆன்ஷரீபை மொழிபெயர்த்ததாகவுள்ள துக்ககரமான செய்தியை இதுவரை உலகம் கேட்டிருக்கவே மாட்டாது.

A. எத்தேசத்தவருக்கும் எம்மதத்தினருக்கும், எச்சாதியினருக்கும் முடிவாக உலகத்திற்கெல்லாம் பொதுவாகவே நம் கடைசி திருமறையானது ஆண்டவனால் நம் ரசூலே கரீமிடம் ஒப்படைக்கப்பட்ட தென்பதை நீங்களெல்லீரும் நன்கறிவீர்கள். அத்திருக்க அராபியர்கள் மட்டும் தான் அதன் அந்தரங்கத்தை அறிந்துகொள்ளுதல்வேண்டுமோ? மற்ற இனத்தவர்கள் அதன் கருத்தை அறிந்துகொள்ளுதல் கூடாதென்று இந்நாள் வரையில் அத்திருமறையை ஒளித்துவைத்திருந்தீர்கள்? என்னே நுங்களின் மதியீனம்!

B. குர்ஆன் ஷரீப் முழு உலகத்தின் நன்மைக்காகவே இரக்கிவைக்கப்பட்டதென்னும் உண்மையை எவர்தான் மறுக்கவியலும்? குர்ஆன் ஷரீபின் பல உட்கருத்துக்களை அரபி பாஷையைத் தாய் பாஷையாய்க்கொண்டுள்ள அரபியர்களுக்குங்கூட அரபியரல்லாத மகான்கள் விளக்கிக் காட்டியிருக்கின்றனர். ஆனால் அம்மகான்கள் அரபி பாஷையை அறியாதவர்களல்ல. அரபி பாஷையை அறியாத எவரும் இதுவரை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்க முன் வரவில்லை. அரபிபாஷையை அறியாதவர்கள் குர்ஆன் ஷரீபை மொழி பெயர்க்க முன் வருவது பெரும் அசட்டுத்தனமேயாகும். இதை இஸ்லாமிய உலகம் கண்டிக்காமலிருக்கமுடியாது. இந்நிலைமையில் அரபி பாஷையை அறியாத கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் குர்ஆன் ஷரீபை மொழி பெயர்க்கவும் அதற்கு வியாக்கியானமெழுதவும் முன் வந்ததை நிரூபமெழுதியவர் பாராட்டுவதற்குக் காரணம் இவரின் மதியீனமே?

A. தமிழுலகம் அதன் உண்மையான உட்கருத்தையும் வியாக்கியானத்தையும் பார்க்கப் பேராவல்கொண்டு எதிர் பார்த்தவண்ணமாகவே யிருந்துவருகிறது.

B. குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பைத் தமிழுலகம் எதிர்பார்த்திருப்பதாக நிரூபமெழுதியவர் கூறிய துண்மையாயின், "கீமியாஸ ஆதத்து" என்னும் உயர்ந்த கிரந்தத்தை நான்கு வால்யூம்களாகத்தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கும் நெல்லிக்குப்பம் ஜனாப்மௌலானா மௌல்வி அப்துர்ரஹ்மான் ஸாஹிப் அவர்கள்

குர்ஆன் ஷரீபுக்கு சுன்னத் வல்ஜமாஅத்து முஸ்லிம்களின் கொள்கைக் கேற்ப தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் தயாராயிருக்கிறார்கள்.

A. அதன் சரியான உண்மையை உணராததினால் நாம் எல்லோரும் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து உலகமே சதமென்றெண்ணி யிருக்கின்றோம்.

B. முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபை நன்குணராததினாலேயே க்ஷீணதெசையை அடைந்திருக்கிறார்களென்னும் உண்மையை மறுக்க முன் வருகிறவர்களும் உளரோ? அரபி பாஷையிலுள்ள குர்ஆன் ஷரீபை அறிந்துகொள்ளுவது அரபியர்களுக்கு இலகுவான காரியமே. ஆனால் அரபியர்கள் அரபியரல்லாதவர்களைக் காட்டிலும் அதிகமாய் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம் யாது? அரபி பாஷையிலுள்ள குர்ஆன் ஷரீபை அப்பாஷையைத் தாய்ப் பாஷையாய்க்கொண்ட அரபியர்கள் குர்ஆன் ஷரீபை அறிந்துகொள்ள வேண்டிய முறைப்படி அறிந்துகொள்ளாததே அரபியர்கள் க்ஷீணித்துப்போனதற்குக் காரணமென்பது மிகையாகாது. இந்நிலைமையில் அரபி பாஷையை அறியாதவர்கள் குர்ஆன் ஷரீபை அறிந்து கொள்ளவேண்டிய முறைப்படி அறிந்துகொள்ளாமல் முறை தவறி குர்ஆன் ஷரீபை அறிந்து கொள்ள முயலுவது நன்மை பயக்குமா?

குர்ஆன்ஷரீபுக்கு உர்துபாஷையில் எத்தனையோ மொழிபெயர்ப்புகள் இருந்தும் உர்துபாஷையை தாய்ப் பாஷையாய்க் கொண்டவட இந்தியாவில் கிலாபத்தியக்கத்தின்போது அவ்வியக்கத்தில்ஈடுபட பயந்து ஒளிந்திருந்த அஹ்மதியா பேடிகள் இன்றைக்கும் ஜீவித்திருக்கவில்லையா?

A. உண்மை உணர்ந்த உத்தமர்கள் அற்ப அபிப்பிராய பேதத்திற் கெல்லாம் ஐக்கியமின்மை ஏற்படுத்திக் கொள்ளமாட்டார்கள்.

B. ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஜீவித்திருக்கிறார்களென்னும் சுன்னத்துவல்ஜமா அத்து முஸ்லிம்களின் நம்பிக்கையை மறுத்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று கூறிப் பிரசாரஞ் செய்யவேண்டிய அவசிய மில்லாதிருக்க சுன்னத்துவல் ஜமா அத்து முஸ்லிம்களின் கொள்கைக்கு விரோதமான வியாசங்களையும் புஸ்தகங்களையும் வெளியிட்டு முஸ்லிம்களுள் பிளவை ஏற்படுத்தி வருபவர்கள் ஜனம் பா. தாவுத்ஷா ஸாஹிப் போன்ற அஹ்மதியர்களே யன்றி மற்றவர்களல்லவென்பதை நிரூப மெழுதியவர் உணர்ந்து அடங்குவாராக.

A. நுங்களைத் தூற்றுவதாக எண்ணிவிடாதீர்கள். நீங்கள் மிகவும் அறிந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும்.

B. "கோமாலை கொண்ட கண்ணுடனும், பழைய பொறாமையுடனும், நீங்கள் பாகுபாடு செய்ய முன் வந்தால்" என்றும், "பின் வரும் துன்பத்தை நீங்களே அனுபவிப்பதோடு இன்னும் தாழ்மையான நிலைமையை அடைவீர்கள்" என்றும் "அதை அறியாமல் ஏன் அலைந்து திரிகிறீர்கள்" என்றும், "பொறாமையின் காரணமாக ஐக்கியமின்மையையும் கலகங்களையும் மூட்டி விடுகிறீர்கள் என்னே நுங்களின் பகுத்தறிவு" என்றும், "நீங்கள் அன்னவரை பொறாமையின் காரணமாகச் செய்துவரும் சூழ்ச்சிகளும் தூஷணங்களும்" என்றும், தந்நிரூபத்தில் வரைந்துவிட்டுப் பிறகு இவர் "நுங்களைத் தூற்றுவதாக எண்ணிவிடாதீர்கள்" என்று எழுதியிருப்பது விந்தையினும் விந்தையே!

"என்னே நுங்களின் மதியீனம்!" என்றும், "என்னே இவர்களின் அறியாமை" என்றும், "என்னே நுங்களின் அறியாமை" என்றும், "என்னே நுங்களின் பகுத்தறிவு" என்றும்" "என்னே நுங்களின் அறிவின் பெருமையே பெருமை" என்றும் வரைந்துவிட்டுப் பிறகு, "நீங்கள் மிகவும் அறிந்தவர்கள் என்பது எனக்குத் தெரியும்" எனக் கூறுவதைப் பார்க்க நிரூபமெழுதியவரின் அறிவீனத்தை நன்றாய் விளக்கிக் காட்டுகிறது.

A. பெரியார்களைத் தூஷிக்கும் குணம் உலக ஜனங்களிடத்தில் உண்டு என்னும் அபவாதத்தை நீக்கிக்கொள்ள முற்படுங்கள்.

B. இஸ்லாமை அறியாமல் சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிம்களுக்கு விரோதமாய் அஹமதியாக் கொள்கையைப் பிரசாரஞ்செய்து தென்னாட்டிலுள்ள சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிம்களின் மத்தியிலிருந்துவரும் ஒற்றுமையைக் கெடுத்து பிளவை யுண்டுபண்ணுவதற்காக முயன்று வருகிற கனம் ஷா சாஹிப் அவர்களை "பெரியார்" என்று கூற நியாயமும் சத்தியமும் இடந்தருமா?

A. இவ்விதமாக எழுதியதற்காக என்னையும் தூஷணிக்க முன் வருவீர்களென்பதை நானறிவேன். ஆனாலும் ஆப்கன் அமீரைப் போல் அஹ்மதியர்களைக் கல்லாலெறிந்து உயிர்வதை செய்ததைப் போலில்லாமல் தூஷணமும் துண்டுப் பிரசுரத்தோடு நம் இந்திய முஸ்லிம்கள் இருந்து வருகிறதைப்பற்றி யான் பெரிதும் பாராட்டி வந்தனம் செய்யவும் முற்பட்டுள்ளேன்.

B. நிரூபமெழுதியவர் மேலே கண்டவாறு கூறுவதிலிருந்து அன்னவர் அஹ்மதியரைச் சேர்ந்தவரென்று கருதவும் இடந்தருகின்றது.

ஆப்கனில் சில அஹ்மதியாக்களைக் கொன்றதுபோல ஒருசமயம் தம்மையும் கொன்றுவிடுவார்கள் என்று பயந்து தன் பெயரைக் காட்டாது இந் நிரூபத்தை யெழுதி வெளியிட்டார் போலும்!

ஆப்கனிலிருக்கும் அரசாங்கத்திற்கும் இத்தேசத்திலுள்ள அரசாங்கத்திற்கு மிடையிலுள்ள வேற்றுமையை நிரூபமெழுதியவர் இன்னும் தெரிந்துக்கொள்ளவில்லையா? ஆப்கனில் இஸ்லாமிய அரசாங்கமும் இத்சேத்தில் அதற்கெதிரிடையான அரசாங்கமும் இருந்து வருகின்றன என்பதை உலகம் நன்கறியும்.

ஆப்கனிலுள்ள இஸ்லாமிய அரசாங்கம் அஹ்மதியாக்களை வெருப்பதாயும் இத்தேச அரசாங்கம் அஹ்மதியாக்களை நேசிப்பதாயும் இருந்து வருவதற்கான உண்மை வெளியாகும் காலம் வந்துகொண்டே யிருக்கின்றது.

A. என்னையும் மற்றவர்களையும் எவ்விதமாக தூஷணித்த போதிலும் நாம் செவிகொடோம்.

B. உண்மையை விசாரித்தறிந்து மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி பாரபக்ஷமில்லாமல் நீதி வழங்குவதற்காகவே அரசாங்கங்கள் பற்பல நீதி மண்டபங்களை அமைத்திருப்பதாக உலகம் கருதியிருந்தது. ஆயினும் ஒத்துழையா யியக்கத்தின்போது நீதிபதியாகவிருந்த பலர் தங்களின் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு வணங்கி மனச்சாக்ஷிக்கு விரோதமாய் அநியாயத்தை நியாயமென்றும் அசத்தியத்தைச் சத்தியமென்றும் கூறி தீர்ப்பளித்துக் கொண்டிருந்தபோது அன்னவர்கள் ஜனங்களின் தூஷணைகளுக்கு செவி கொடாதிருந்ததைக் கண்டு களித்தவர்கள் நிரூபமெழுதியவரின் இக்கூற்றை முன்னிட்டு ஆச்சரியப்பட மாட்டார்கள். இந்நிரூபத்தை யெழுதியவருக்கும் இவருடைய குருவுக்கும் அஹ்மதியா கம்பெனியாரால் கிடைக்கப் பெற்றிருக்கும் பலவிதமான வருவாய்க்கு ஆசைவைத்திருக்கும் வரை அன்னவர்கள் ஜனங்களின் தூஷணைகளுக்கு செவிகொடாமலிருப்பது மிகவும் அவசியமே.

கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் காதியானி அல்லவா?

"தௌராத், இஞ்சீல், குர்ஆனேகரீம், ஆகியவைகளில் நான் கொண்டிருக்கும் உறுதியைப்போலவே எனக்கு வரும் வஹீயிலும் உறுதியிருந்து வருகிறது." (...)

"குர்ஆன் ஷரீபு அல்லாஹுதஆலாவின் திருவசனமென்று நான் நம்புவது போலவே (அல்லாஹுத் ஆலாவிடமிருந்து) எனக்கு இறங்குகிறவைகளிலும் நான் நம்பிக்கை வைத்திருக்கின்றேன்" என்று "ஹகீக்கத்துல்வஹீ" என்னும் புத்தகம் 211-வது பக்கத்தில் மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானி வரைந்திருக்கின்றார்.

மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி இந்துக்களுக்கு கிருஷ்ண பரமாத்துமாவாகவும், கிறிஸ்தவர்களுக்கு, "மஸீஹ்" ஆகவும், முஸ்லிம்களுக்கு மஹ்தி "முஜத்தித்" ஆகவும் தோன்றினு ரென்றும், "மிர்ஸா ஸாஹிபை நிந்திப்பவர்களை நான் இழிவுபடுத்துவேன். அவருக்குதவி செய்பவர்களுக்கு நான் உதவி செய்வேன்," என அல்லாஹுத ஆலா மிர்ஸா ஸாஹிபுக்கு அறிவித்திருக்கிறு னென்றும், மிர்ஸா ஸாஹிப் இந்தியாவின் நபி யென்றும், காஜா கமாலுத்தீன் ஸாஹிப் "சஹீபயெ ஆஸிபியா" 68,81 முதலிய பக்கங்களில் வரைந்திருக்கின்றார்.

மிர்ஸா ஸாஹிபை இந்தியாவின் நபியென்று முன்னுல் கூறிய காஜா ஸாஹிப் பின்னர் தாம் அவ்வாறு கூறவில்லை யென்று ஏன் பிதற்றுகிறுரோ தெரியவில்லை.

மிர்ஸா ஸாஹிப் தமக்கு வஹீ வந்ததாய்க் கூறியவைகளை ஒப்புக்கொண்டு எழுதியும், பகர்ந்தும் வருகின்ற காஜா ஸாஹிபை சுன்னத்துவல்ஜமாஅத்து முஸ்லிமென்று பிணங்கில் கூறிய கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் உண்மையில் சுன்னத்வல் ஜமா அத்து முஸ்லிமாக விருக்க முடியுமா? வஹீ நபிமார்களுக்குமட்டும் உரித்தானதென்று இஸ்லாம் வெகு தெளிவாய்ச் செய்திருக்கும் தீர்மானத்திற்கு விரோதமாய் மிர்ஸா ஸாஹிபும் காஜா ஸாஹிபும் கொண்டுள்ள கொள்கையைத் தழுவி, கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் "நபிமார்களுக்கு ஆண்டவனு லருளப்பெற்ற அனுக்கிரகங்களுள் வேத இரகசியத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய வஹீ என்னும் ஞான வெளிப்பாடும் ஒன்ருதலின் அதை நேர் வழியில் செல்லக்கூடிய ஒவ்வோர்

உண்மை முஸ்லிமும் அடைதல் கூடும்." என்று "ஜவாஹிருல்புர்கான்" முதல் வெளியீடு 24-வது பக்கத்தில் வரைந்திருக்கின்றார். இவ்வாறு கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் வரைந்திருப்பதற்கு மௌல்வி முஹம்மது அலி. எம். ஏ, ஸர். ஸையித் ஆகியவர்கள் இயற்றியிருக்கும் புத்தகங்களை மட்டுமே ஆதாரமாகக் காட்ட சாத்யப்படுமென்பதை நாம் அறிவோம். ஆயினும் காதியானிக் கொள்கையில் தமக்கு எவ்வித சம்மந்தமுமில்லை யென்று கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்கள் கூறிவருவது நமக்குப் பெரும் ஆச்சரியத்தை மூட்டுகின்றது.

மிர்ஸாஸாஹிப், காஜா கமாலுத்தீன், மௌலவி முஹம்மத் அலி எம். ஏ, ஸர். ஸையித், பா. தாவுத்ஷா ஸாஹிப் ஆகியவர்களின் கொள்கைகளுள் ஒன்றுக்கொன்று இருந்து வரும் சம்மந்தங்களைப் பற்றி இன்ஷா அல்லாஹுத ஆலா சீக்கிரத்தில் வெளியிடுவோம்.

B. D. ஷா. கிள்ளானில் வினவப்பட்டார்.

வினு :—மௌலவி முகம்மது அலி எம்.ஏ. எல்.எல்.பி., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட குர்ஆன் ஷரீபைப்பற்றித் தங்களபிப்பிராயமென்ன ?

விடை :—முகம்மது அலி எம். ஏ. அவர்களின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக் குர்ஆனில் சில வியாக்யானங்கள் தப்பாயிருந்தாலும், பெரும்பாலும் சரியாகவிருக்கலாம்.

வினு :—முகம்மது அலியின் ஆங்கில தப்ஸீரை மலங்கு அஹ்மது பாக்ஷா ஸாஹிபும். தாங்களும் தமிழில் மொழிபெயர்க்கும் உரிமையைப் பெற்றிருப்பதாக ஏற்கனவே கூறியவாறு தானே இப்பொழுது மொழிபெயர்த்து (ஜவாஹிருல்புர்கானை வெளியிட்டு) வருகிறீர்கள் ?

விடை:—இல்லை. ரூஹுல்மஆனி. தப்ஸீரேகபீர், தப்ஸீர்பைளாவி, ஜலாலைன், தப்ஸீரே ஹக்கானி, நஜீர்அகமது தர்ஜுமா, மௌல்வி முகம்மது அலியின் தர்ஜுமா, ஷாறபியுத்தீன் தர்ஜுமா, பத்ஹுல்கரீம், புத்ஹாத்துற்ற குமானிய்யா முதலியன.

வினு:—(1) மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியைநபி, மஸீஹ் முஜத்திது என்போர், (2) அன்னவரைமஸீஹ். முஜத்திது என்று

மட்டும் கூறுபவர். இவ்விருவகுப்புள் தாங்கள் எதைச் சார்ந்தவர்கள்.

விடை:—யாம் இவ்விரண்டு கூட்டத்தையும் சேர்ந்தவனல்லன் என்பதை நேற்றிரவு பிரசங்கத்தில் பஹிரங்கமாகச் சொல்லி விட்டேன்.

வினு:—அஹ்மதியா அஞ்சுமன் சபையாரால் வெளியிடப்பட்டிருக்கும் "திகாவிட்டு இஸ்லாம்" என்ற புத்தகத்தைப் பற்றியும், ஷை சபையாரால் வெளியிடப் பட்டிருக்கும் சில பிரமாணங்கள் கொண்ட உறுதிமொழிப் பத்திரத்தைப் பற்றியும் தங்கள் அபிப்பிராயமென்ன?

விடை :—வினுவில் குறிப்பிட்டுள்ள புத்தகத்தை நான் பார்க்கவுமில்லை. அவைகளைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது.

வினு :—மஸீஹ் என்பதன் அர்த்தம் என்ன ?

விடை :—மஸீஹ் என்றால் இப்ருனிய பாஷையில் தைலம் தேய்க்கப்பட்டவர்'

வினு :—இப் பதினன்காவது நூற்ருண்டின் சீர்திருத்தக் காரர் யாரென்பதைத் தெரிவிக்க முடியாவிட்டாலும், பதின்மூன்ரும் நூற்ருண்டின் சீர்திருத்தக் காரரையாவது சொல்லலாமா ?

விடை :—என்க்கு மனப்பாடமின்மையால் ஆதாரமுள்ள நூல்களைப் பார்த்துக்கொள்ள.

வினு :—முதல் நூற்ருண்டு முதல் தொடர் பாகவந்த சீர்த்திருத்தக்காரர்களின் பெயர்களைத் தாங்கள் கூறமுடியுமா ?

விடை :—எனக்கு மனப்பாடமின்மையால் ஆதாரமுள்ள நூல்களைப் பார்த்துக்கொள்ள.

B. D. ஷாவின் விேனுதப்பிரசாரம்.

ஜனுப். K. A. பக்கீர் முகம்மது அவர்களுக்கு ஈப்போ. ம. மு. காதர்பாகூஷா உடைய ஸலாமுன் அலைக்கும்.

தாங்களனுப்பிய துண்டுப் பிரசுரங்கள் கிடைத்து சங்கதி தெரிந்தேன் "தாருல் இஸ்லாம்" பத்திராதிபர் பா. தாவுத்ஷா ஸாஹிபை ஆதரிக்கும்படி அவர்கள் 25-3-25-ல் எனக்கொரு கடிதம் எழுதியிருந்துங்கூட இந்நகர இந்திய முஸ்லிம்கள் மேற்படியாரை ஆதரிக்கவுமில்லை, அன்னவரின் பிரசங்கத்தைக் கண்டு மகிழவுமில்லை, உணவு முதலிய வசதிகள் செய்யவுமில்லை. மேற்படியார் வந்ததினத்தன்றுயான் பத்து காஜாவுக்குப்போகவேண்டியதன் நிமித்தம் ரயில்வே ஸ்டேஷனுக்

குப் போயிருந்தேன். அப்பொழுது அவர் ரயில் வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்தேன் அதன் பின்னர் பார்க்கவேயில்லை.

இந்நகர் செட்டிகள் கொண்டாடும் தனவைசிய சங்கத்தார்கள் தான் அவருக்கு உணவு முதலிய வசதிகள் செய்து கொடுத்தனர்.

தாவுத்ஷா ஸாஹிபை வரவேற்க நான் வந்திருந்ததாக இந்நகரில் பிரசுரமாகும் "டைம்ஸ்" பத்திரிகை பிரசுரித்திருந்ததை யொட்டி யான் அப்பத்திரிகையின் ஆசிரியரை எச்சரித்துமிருக்கின்றேன்.

....

"தாருல் இஸ்லாம்"

தைபிங். 25-3-25.

ஜனுப். ம. மு. காதர்பாக்ஷா ஸாஹிப் அவர்களுக்கு மிஸ்கீன்களாகிய பா. தாவுத்ஷா ஸாஹிப், ஒ. இ. முகம்மது ஷரீபு ஸாகிபின் அஸ்ஸலாமு அலைக்கும். உபயக்ஷேமத்து.

தங்களுடைய ஈபோவுக்கு, அடுத்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில்வந்து இரண்டு பிரசங்கங்கள் செய்யலாம் என்று எண்ணியிருக்கின்றோம். தாங்கள் இதுவிஷயமாய் ஜனுப். ம. அ. இப்ராம் சாஸாஹிப் அவர்களுடனும், திருவாளர் பி. ச. சு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுடனும் கலந்துகொண்டு ஆகவேண்டிய காரியங்களுக்கு ஏற்பாடு செய்வீர்களென்று கேட்டுக்கொள்கிறோம். மற்றும் பிறகு வஸ்ஸலாம்.

இங்ஙனம்

பா. தாவுத்ஷாஸாஹிப் உத்தரவுக்கு.

(ஒப்பம்) ஒ. இ. முகம்மது ஷரீபு).

கனம். பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்களுக்கு பஹிரங்க அழைப்பு.

இதனால் தாருல் இஸ்லாம் ஆசிரியர் கனம் பா தாவுத்ஷா ஸாஹிப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதாவது:—

தாங்கள் மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியைச் சார்ந்தவர் தான் என்றும், தங்கள் கொள்கை சுன்னத்துஜமா அத்துக்கு முரண்பட்டதென்றும் நிரூபிக்கத் தயாராயிருக்கின்றோம். ஈசாநபி (அலைஹிஸ்ஸலாம்) இறந்துவிட்டாரென்றும், நரகத்திற்கு முடிவு உண்

டென்றும் எழுதியதை ரத்துசெய்யவும், தங்கள் குர்ஆனின்மொழி பெயர்ப்பாகிய ஜவாஹிருல்புர்கானில் அநேக தவறுதல்கள் இருப்பதை எடுத்துக் காட்டவும் அவைகளை ரத்துசெய்யவும் அடியில் கையொப்பமிட்டவர்களாகிய நாங்கள் தயாராயிருக்கிறோம்.

தாங்கள் 8-5-25 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு பெரிய பள்ளியில் முஸ்லிம்கள், உலமாக்கள் முன்பாகத் தாங்கள் வாதத்தை நிரூபிக்க சமுகம் கொடுக்குமாயும், அல்லது தாங்கள் ஒரு இடத்தை சிங்கை நகரில் குறித்து தினத்தையும் அறிவித்தால் நாம் அச்சமயம் வரத்தயாராயிருக்கின்றோம். தாங்கள் சத்தியத்தைக் கடை பிடித்திருந்தால், இவ்வேண்டுகோளை ஒப்புக் கொள்வீர்களாக.

இப்பஹிரங்க அழைப்பை சகல முஸ்லிம்களும் அறியும் பொருட்டு விளம்பரஞ் செய்துள்ளோம்.

இங்ஙனம்.

மௌல்வி அப்துல் ரஹ்மான், தென்காசி.
மௌல்வி முகம்மத் உஸ்மான், ஏனங்குடி.
மௌல்வி முகம்மத் ஷர்புத்தீன், வேலூர்.

ஆப்கனில் நியமத்துல்லாகான் ஏன் கொல்லப்பட்டார்.

ஆப்கனில் பிரசுரமாகும் "அமான் அப்கான்" என்னும் பத்திரிகையின் அறிக்கை:—

காதியானி என்னும் கொடிய கொள்கையை ஆப்கனில் பிரசாரஞ் செய்துவந்த முல்லா நியமத்துல்லாகான் கல்லெறிந்து கொல்லப்பட்ட போழ்தே காதியானிக் கொள்கையின் கெடுதியைப் பற்றியும் அதனால் தீனுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டுவரும் கெடுதியைப் பற்றியும் விரிவாக எழுதியிருக்கின்றோம். அன்றியும் காதியானீ பிரசாரத்தால் ஆப்கனில் பொதுமக்களினூடே ஒற்றுமையின்மையும் சமாதானக் குறைவும் சச்சரவும் காட்டுத்தீபோல் பரவிவந்ததை யொட்டியும் அப்பொழுதே விளக்கிக் காட்டியிருக்கின்றோம். காதியானி மதத்தைச் சேர்ந்த பிரசாரகர்கள் பொது மக்களின் நல்லகொள்கையைக் கெடுத்து வருவது மிட்டுமின்றி அவர்கள் அன்னியர்களுக்கு சாதகமாய் ஆப்கனில் பிரசாரம் செய்து வருவதோடு அன்னிய அரசாங்கங்களின்மீது ஜனங்களுக்கு விசுவாசத்தை உண்டுபண்ணிக் கொண்டும் வருகின்ற

னர், எனபதையும் விரிவாக வரைந்து அதற்குப் பல ஆதாரங்களையும் எடுத்துக் காட்டியிருக்கின்றோம்.

காதியானிப்பிரசாரகர்கள் செய்யும் அருவருக்கத்தக்க பிரசாரங்களால் மதத்திற்கும் தேசத்திற்கும் பெருத்த தீங்குண்டாகக் கூடியதாக யிருப்பதை முன்னிட்டே அப்பிரசாரர்களைக் கொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. காதியானிகளின்கொடிய பிரசாரத்தையொழிக்கக் கருதி ஆப்கன் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் மற்றவர்கள் குறுக்கிட எவ்வகையிலும் நியாயமில்லையென்றே கூறுகிறோம். காதியானிகள் விஷயங்களை அறியும் சக்தியுள்ளவர்களாயின் நாம் ஏற்கனவே வரைந்துள்ள விஷயங்கள் அவர்களுக்குப் போதியனவாகும். நாம் எடுத்துக்காட்டிய அரிய விஷயங்களுக்குப் பிறகு காதியானிகள் அனுவசியமாய் வார்த்தையாட முன் வரவாட்டார்கள் என்ற நம்பிக்கையும் நமக்கிருந்தது.

காதியானிகளுக்கு அநேகமாய் நல்லறிவு பிறந்திருக்குமென்றெண்ணியே பிறகுஇரண்டு காதியானிகள் கொல்லப்பட்டதையொட்டி நாம் எதையும் எழுதாமலிருந்தோம். கொல்லப்பட்ட அவ்விருவரும் அன்னியர்களோடும் எதிரிகளோடும் (ஆப்கனுக்கு விரோதமாக) ரகசியமாய்க் கடிதப் போக்கு வரவு செய்து வந்தார்களென்பது ருஜு வாகியிருக்கின்றது. காதியானிகளின் அபாயகரமான செய்கைகள் உலகத்தாருக்கு வெளுத்துப்போன பின்னரும் அவர்கள் தங்களின் பிசகையொட்டி பிராயச்சித்தம் செய்யத் தயாராயில்லாத தற்காக வருந்துகிறோம். அவ்விரு காதியானிகள் கொல்லப்பட்டதை யொட்டி நாம் எதையும் எழுதாமலிருந்தோ மாயினும், "ஜமீன்தார்," "அல்ஜமீயத்" ஆகிய பத்திரிகைகள் தகுந்த ஆதாரங்களோடு காதியானிகளைக் கொன்றது நியாயமென நிரூபித்திருக்கின்றன.

மோசக் காரர்களும், பொய்யர்களும், உண்மையை மறைப்பவர்களும் கொடியவர்களுமான காதியானிகள் தங்களின் இழிவான காரியங்களை இன்னமும் விட்டார்களில்லை. இக்கொடிய காதியானிகள் விஷய ஞானமில்லாத பாமரர்களுள் மனக் கிலேசத்தையும் உண்டு பண்ணிக் கொண்டே இருக்கின்றனர். ஆதலின் காதியானிகளைப் பற்றி மீண்டும் எழுத முன் வந்தோம். காதியானிகளின் முட்டாள் தனமான கண்டனங்களை முன்னிட்டு நாம் பயந்து போனதாக அன்னவர்கள் கருதாமலிருப் பதற்காகவே காதியானிகளின் ஏற்கத்தகாத கொடிய செய்கைகளை யொட்டி மறுமுறை நம் பத்திரிகையில் விரிவாக பிரசுரிப்போம்.

காதியானிகள் இஸ்லாமிய விரோதிகளின் ஆயுதங்களாக் விருக்கின்றனர்.

ஆப்கனில் பலதரப்பட்ட மதக்கொள்கையையுடைய பிரஜைகள் வசித்துவருகின்றனர். பலகொள்கைகளையுடைய அன்னியதேசத்து ஜனங்களும் ஆப்கனில் இருந்து வருகின்றனர். இவர்கள் மதம், தேசம் ஆகியவைகளின் லக்ஷியங்களுக்கு எதிரிடையான குழப்பம் முதலிய வைகளில் ஈடுபடுவதேயில்லை. இவர்கள் ஜனங்களின் கொள்கைகளைக் கெடுக்கவோ எதிரிகளின் ஆயிதங்களாகவிருக்கவோ இஷ்டப்படுவ தில்லை. ஆதலின் அன்னவர்களுக்கு எவ்வித இடையூறும் ஆப்கனில் நிகழ்வதில்லை. ஆயினும் காதியானிகள் மதக் கொள்கைகளில்மட்டும் வேறுபட்டவர்களன்று. சந்தேகமின்றி அன்னவர்கள் ஆப்கனைக் கவிழ்க்கத்தக்க ராஜீயபிரசாரத்திலும் ஈடுபடுகின்றனர். சிற்சில எதி ரிகளின் உத்தரவுகளுக்கிணங்கி அவர்களுக்குத் தலைவணங்குவதே காதியானிகளின் சிறந்த லக்ஷியமாக விருந்துவருகிறது.

காதியானிகளின் நஞ்சூட்டிய இவ்விஷமச் செய்கைகள் ஆப்கனை நாசமாக்கிவிடுமென்பதை எவரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆனது பற்றியே ஆப்கனிலுள்ள இஸ்லாமிய அரசாங்கம் ஆப்கனில் காதியா னிப்பிரசாரம் நடைபெற இடந்தர முடியாது. ஆப்கனிய அரசாங்கத் தின் சட்டதிட்டங்களுக் குட்பட்டு சிக்ஷிக்கப்படாமலிருக்க வேண்டு மென காதியானிகள் கருதுவார்களாயின் அவர்கள் தங்களின் பிரசார கர்களை, ஆப்கனுக்கு வராமலும், ஆப்கனில் பிரசாரஞ் செய்யாமலும் தடுத்துக்கொள்ளவேண்டும். இன்றேல் ஷரீஅத்தின் சட்டப்படி மதம், ராஜீயம் ஆகியவைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை கள் எடுத்துக்கொள்ளப்படும் என்பது திண்ணம்.

ஆகவே காதியானிகள் ஆப்கனில் சிக்ஷிக்கப்படுவார்களாயின் அதற்கு காதியானிகளே பொறுப்பேற்றுக் கொண்டவராவர்.

அஹ்மதியாக்களும் ஆப்கனும்.

ஆப்கன் சில அஹ்மதியாக்களைக் கொன்று விட்டதற்காக ஆப் கனைக் கண்டித்து "தாருல் இஸ்லாம்" பல வியாசங்கள் எழுதி வரு வதை சகலருமறிவார்கள். ஆயினும் "தாருல் இஸ்லாம்" செய்து வரும் கண்டனத்திற் காதரமாக மௌலானா முஹம்மத் அலி அவர்கள்

ஏதோ எழுதியிருப்பதாய் "தாருல் இஸ்லாம்" சமீபத்தில் வரைந் திருப்பதை யொட்டி நாம் ஆச்சரியப் படாமலிருக்கக் கூடவில்லை. ஆகவே தாருல் இஸ்லாமின் கூற்றை மறுத்துக் கொண்டிருக்கும் விஷயங்களுள் சிலவற்றை அடியில் வரைகின்றோம் :—

மௌலானா முஹம்மத் அலீ அவர்களால் நடத்தப்படும் "ஹம்தர்த்" என்னும் உர்தூ பத்திரிகையின் 9-3-25. வெளியீட்டில் "துருக்கியின் ராஜீயம்" என்ற தலைப்பின் கீழ் பத்திராதிபர் எழுதியுள்ள நீண்ட வியாசத்தின் இறுதியில் "இன்று அதி ஜாக்கிரதையோடு வேலை செய்யவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கின்றது. கெட்டிக்காரர்கள் தங்களின் லக்ஷியத்தை யடைவதற்காக என்னென்ன முறைகளைப் பின்பற்றி வேலை செய்துவருகிறார்களென்பதை நாமறிவோம். (காபூலைச் சேர்ந்த) கோஸ்த்து என்னுமிடத்தில் நடைபெற்ற கலகத்தை யொட்டிச் செய்யப்பட்ட காரியங்கள் நம்முன் நிற்கின்றன. அமீர் அமானுல்லாகான் அஹ்மதியராகி விட்டாரென ஒரு புறத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. மறுபக்கத்தில் அக்கலகத்திற்கு அஹ்மதியாக்களின் சகாயம் கிடைத்துக் கொண்டிருந்ததை நாமறிவோம். சிலதினங்களுக்கு முன் காபூலில் கொல்லப்பட்ட இரண்டு அஹ்மதியாக்களும் காபூலின் லக்ஷியத்திற்கு விரோதமாய் அதன் எதிரிகளிடத்தில் கடிதப் போக்கு வரத்துச்செய்து கொண்டிருந்தார்களென சென்ற வாரத்து "அமான் அப்கான்" என்னும் பத்திரிகையின் மூலமாய் நாம் தெரிந்து கொண்டோம். நியமத்துல்லாகானைப் பற்றியும் இவ்வாறே அறிவிக்கப்படுகிறது" என்று வரையப்பட்டிருக்கிறது.

24-4-25- "ஹம்தர்த்" தில் "முர்தத்தின் கொலையும் காதியானீ வகுப்பும்" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டிருப்பதாவது :—

(காபூலில் அஹ்மதியாக்கள் கொல்லப்பட்டதை யொட்டி) காதியானீ வகுப்பார் செய்த நடவடிக்கைகள் எவ்வகையிலும் அங்கீகரிக்கத் தக்கதல்ல. ஆப்கனுக்கும் அதன் அரசாங்கத்திற்கும் விரோதமாக காதியானீகள் கைகொண்ட முறையை யெவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. அன்றியும் காதியானீகளின் இந் நடவடிக்கையைப் பலமாக எதிர்க்க வேண்டியதும் அவசியமே. ஆப்கன் அரசாங்கத்திற்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணக் கருதிய காதியானீகள் முஸ்லிம்மல்லாத வல்லரசர்களிடத்திலும், சர்வதேச சங்கத்திடத்திலும் முறையிட்டு ஆப்கனுக்கு விரோதமாய் பெரும் கிளர்ச்சியை செய்ய ஆரம்பித்தனர். இக்கிளர்ச்சி ஒழுங்கற்றதாயும், ஆப்கனுக்கு

நஷ்டத்தை யுண்டுபண்ணக் கூடியதாயு மிருப்பதால் இதை எந்த முஸ்லிமும் ஒரு நிமிஷத்திற்கேனும் அங்கீகரிக்கக்கூடாது. என் பதே.

முதலில் இந்தியனு? அல்லது முஸ்லிமா?

முதலில் முஸ்லிம் பிறகு இந்தியன் என்று சில முஸ்லிம்கள் கூறிவிட்டால் அதை இந்துக்கள் கண்டிக்க முன்வந்து விடுகின்றனர் எனக் கூறி காஜா கமாலுத்தீன் அப்படிப்பட்ட இந்துக்களை எச்சரித்து ஒரு வியாச மெழுதியிருக்கின்ருர்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போழ்து முஸ்லிமாகவே பிறக்கின்ருன் என்று மௌலாஞ அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் வரைந்து இதற்கு ஆதாரமாக பல மேற்கோள்களை எடுத்துக் காட்டி யிருக்கின்ருர்கள். ஒவ்வொரு மனிதனும் இயற்கையாகவே முஸ்லிமாகத்தான் பிறக்கிருன் என்னும் கருத்தையுடைய வாக்கியத்தை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அருளி யிருக்கின்ருர்கள்.

இஸ்லாமை ஜனித்த பூமியாகிய ஜசீரத்துல் அரப் என்னும் புண்ணியதேசமே இஸ்லாம் உலகத்தின் தாய்நாடாகும். உலக முஸ்லிம்களின் தாய்நாடாகிய மக்கமாநகரம் மதீஞமுதலிய புண்ணியஸ்தலங்களில் அன்னியர்களுக்கு செல்வாக்கேற்படாமல் தடுப்பதற்குக்கூட முஸ்லிம்கள் சுயேச்சையுள்ளவர்களாக விருக்கவேண்டியதே.

இந்திய முஸ்லிம்கள் சுயேச்சையற்றவர்களாக விருந்ததால் இஸ்லாமின் தாய்நாடாகிய புண்ணிய ஸ்தலங்களுக்கு பாதகமேற்பட்டதென்பதை உணர்ந்தபின்பே (இந்திய முஸ்லிம்கள்) தங்களின் சுயேச்சைக்காகக் கிளர்ச்சிசெய்ய முன்வந்தனர். இன்னிலைமையில் "தாருல் இஸ்லாம்" ஆசிரியர் முதலிய சிலர் தங்களை முதலில் இந்தியன் பிறகு முஸ்லிம் என்று ஏன் கூறிக்கொள்கிருர்களோ தெரியவில்லை ?

ஓர் இந்து ஓரே சமயத்தில் இந்தியனுகவும் இந்துவாகவும் விருப்பதுபோல் மற்ருெருவன் இந்தியனுகவும் முஸ்லிமாகவும் இருக்கமுடியாதென்று இவர்கள் கருதுகிருர்கள்போலும் !

பா. தாவுத்ஷாவும் முஹம்மதியரா ?

எல்லாவற்றையும் படைத்து ரக்ஷித்துக்காப்பாற்றி ஆளும் நாயகனுக்கே சகல துதிகளும்:—

நிற்க, சிலதினங்களாக இச்சிங்கையில் பா. தாவுத்ஷா B. A. அவர்கள் தாம் ஒரு இஸ்லாமியபாதிரி என்னும் சார்பில் அன்பு, நமது கடமை, இஸ்லாம் மானிடற்குரிய மதம் என்பவைகளைப் பற்றி எலிமெண்டரி ஸ்கூலிலும் இந்து சங்கத்திலும் டவுன் ஹாலிலும் முறையே பிரசங்கம் செய்தார். அன்பு நமது கடமை, என்னும் விஷயங்களில், பா. தாவுத்ஷா அவர்களுக்குத் தெரிந்ததை விட இதர மதஸ்தர்கள் அதே இடங்களில் விவரமாகச் சொன்னார்கள். இஸ்லாம், மானிடற்குரிய மதம், என்று சொல்ல வருவதற்குமுன் கிருஸ்தவ மார்க்கமும், யஹூதியமார்க்கமும், மற்றும் மதங்களும் யாருக்காக வந்தன ? மானிடற்குரியதுதானா, பிராணிகளுக்குரியதா அல்லது மற்றும் ஜீவராசி, தாவர வர்க்கங்களுக் குரியதா ? என்பதைப்பற்றி விபரமாக சொல்ல நமதுமுஸ்லீம் பாதிரியார் பா. தாவுத்ஷா முன்வர வேண்டும்.

பா. தாவுத்ஷாவுடைய போதனைகளை யோசிக்குங்கால் இவர் இன்ன மதத்தைச் சேர்ந்தவரென்று சொல்வது அசாத்தியம். எந்த மதஸ்தரைக் காண்கின்றாரோ அவர்களுக்கு ஒத்ததைப்போல் பேசுகிறார் நடிக்கிறார். இவர் உடையில் இஸ்லாமியரைப்போல் இருந்தாலும் பேச்சுகளில் மற்றமதங்களில் சேர்ந்தவராகவே காணப்படுகிறார். இவர் எந்த மார்க்கத்தைத்தான் கடைபிடித்திருக்கிறார் என்பதையும், அந்த மார்க்கத்தின் ஆதாரங்களையும் எடுத்துக் காட்டுவாரா? அப்படி இவர் ஒரு முஹம்மதியரேயென்று சொன்னால் இச்சிங்கையில் வெளியான சில பிரசுரங்கள் பிரகாரம் இவருக்கு முஹம்மதிய கல்விமான்கள் முன்னிலையில் மததர்க்கம் செய்யத்தக்க ஞானமும் போதுமான ஆதாரமுமில்லாததினால் இவருக்கும் முஹம்மதியமதம் அவ்வளவுதான் தெரியும்.

"கல்விக்கழகு கசடறமொழிதல்" என்பதைப்போல் இவருடைய மதத்திற்கு அழகு கசடுயில்லாத மார்க்கக் கல்வியே தவிர இதற்கு மாற்றமாய்" கல்விக்கழகு தங்கமெடல் பெறல்" என்று நினைத்துக்கொண்டல்லவா இவர் மார்க்க விஷயத்தில் தர்க்கம் பேசினால் B.A. பட்டத்தையும் தங்கமெடலையும் எடுத்துகாட்டுகிறார். என்ன இவருடைய ஞான சூனியம்! முஹமதியர்களான எல்லா ஜாதியர்களும் இவர் கொள்கையில் தவறிவிட்டார் என்று சொல்லுகிறார்களே ஒழிய மார்க்கம் தெரிந்த முஹம்மதியர் ஒருவராவது இவருடைய (பா. தாவுத்ஷாவுடைய) கொள்கை சரியென்று ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையினால் இவர் ஒரு கெட்டபிரசங்கியென்றும் தன் மதயோசனையில் ஒன்றும் செய்கிறதில்லை யென்றும் தெரிகிறது. இவருக்கு எந்த மதத்தில்தான் நன்மை தெரிகிறதோ அந்த மதம் தெரிந்த சில கல்விமான்கள் வசம்கேட்டுத் தெரிந்தோ, தர்க்கம்ஆடியோ

அல்லது மார்க்க கலாசாலைகளில்போய் கசடறக்கற்ரு வராத வரையில் இவருடைய நோக்கம் சைபயாகவே முடியும் என்பது திண்ணம். B. A. பட்டமும், தங்கமெடலும் மதத்திற்காகவும், மார்க்கத்திற்காகவும்ஏற்பட்டதில்லை. ஆகையினுல் அவைகளினுல் ஒன்றும் வேகாது. என்பதை நமது முஸ்லீம் பாதிரி என்னும் பா. தாவுத்ஷா விளங்கி உணர்வாராக.

இவர்களுடைய சிஷ்யர்களென்று சொல்லப்படுகிறவர்களில் ஒருவரான மு. அல்லிம் பின் முஅல்லிம் என்பவர் பா. தாவுத்ஷா கோர்வை செய்த புஸ்தகங்களில் ஒருவிதத்தவறுதலும் எடுத்துக் காட்ட முடியவில்லை என்று சாதிக்கிருர். என்ன இவருடைய யோக சாதனை. மற்றெருருவரான K C. மரைக்கான் என்பவரோ ஷெ புஸ்தகங்களில் தவறுதல்கள் இருந்தாலும் திருத்திக்கொள்ளும்படி பா. தாவுத்ஷா சொல்வதாக துண்டுபிரசுரம் அனுப்புகிருர், என்ன அறியாமை! இவர்கள் இருவரில் யார் மெய்யானவர்? அல்லது யார் பொய்யானவர்? என்பது சகலரும் அறிவார்கள். "எல்லாம் பெணையாளும் ஈசன் செயல்."

S. P. Muthu (கி. மதம்)
22-52-5]. **K. Sabapathy** (இ. மதம்)
742: North Bridge Road, SINGAPORE.

நாச்சியார் கோவில் எம்பிரான்

பா. தாவூத்ஷா அவர்களுக்கு, எம்மதமும் சம்மதம் தான்.

சென்னையிலிருந்து இச்சிங்கைமா நகர் விஜயம் செய்திருக்கும், ஸ்ரீமான். பா. தாவூத்ஷா அவர்களும் முகம்மதியரா என்று, மகுடமிட்டு 22-5-25ல் வெளிக்கிளம்பின பிரசுரம் ஒன்றைக் கண்ணுற்றேன், ஹா S. P. முத்துகனே, K. S. பாதிகனே, உமக்கென்ன, முழுபயித்தியமா? முக்கால் பயித்தியமா? பா. தாவூத்ஷா, அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர், என்று அறிந்துக்கொள்ள இது சமயமல்லவே. அவருடைய எண்ணங்கள் எல்லாம் பூர்த்தியாய் முடிந்தால் அவரே தெரிவிப்பாரே. அப்படிக்கின்றி நடுச்சமயத்தில் நீங்கள் குட்டைக்கலைக்கவந்த கோடரிக்காம்புகளா யிருக்கிறீர்களே. எலிமெண்டரி ஆரம்ப பாடசாலையில் செய்த அன்புயென்னும் பிரசங்கத்தில், எவ்விதம்நன்ருய்யெல்லாமதத்தையும் ஆதரித்துபேசினதல்லாமல், இயேசு நாதரையும், ராம பிரானையும், எவ்வளவு நன்ருக உச்சரித்து சிலசமயங்களில், கையால் நமஸ்கரித்தும், இருக்கிருரே தெய்வமே, வடி வாய் வந்தார்ப்போல்வந்த இந்தபுண்ணிய வாளனையா நீங்கள் இப்படி எழுதுகிறது? கிருஸ்து மதத்திலாவது, இந்து மதத்திலாவது பிறக்கவேண்டிய அந்த மஹான் எப்படியோ தவரியல்லவா முஹம்மதிய மதத்தில் பிறந்து விட்டார், இவர்க்கிருக்கும் பொறுமைக்கும்,

சாதுவுக்கும், அழகான பேச்சுக்கும், ஏற்றவாறு அவர் கிருஸ்துவ மதத்திலாவது இந்து மதத்திலாவது பிறந்திருந்தால் அந்த மஹானுக்கு, எவ்வளவோ கண்ணியமும், சிறப்பும், செய்து இருப்போமேயல்லாது, முஹம்மதியர்கள் போல் குறைகூறவும், வெறுக்கவும், பொருமைப்படவும் மாட்டோம் என்பது நீங்களாகிய முத்துகனே, பாதிகனே, விளங்குவீர்களாக.

முஹமதியர்களின், வேதமாகிய குர்ஆன், மற்றும் வேதங்களிலிருந்து பொருக்கி எடுத்ததாக இருக்கும் என்று, மஹா புண்ணிய புருஷனுமாகிய ஸ்ரீமான். பா. தாவூத்ஷா அவர்கள் டவுன்ஹாலில் பிரசங்கம் செய்திருக்கும்போது, அவர் நம்முடைய வேதங்களை நன்ருக ஆதரிக்கிருரென்று உங்களுக்குப் புலப்படாது போனகாரணமென்ன? சென்னையிலே பிறந்து, சென்னையிலே வளர்ந்து, சென்னையிலே பயின்று அச்சென்னையிலிருந்து இச்சிங்கைமா நகர்வந்திருக்கும் ஸ்ரீமான். பா. தாவூத்ஷா மஹானை முஹம்மதிய கல்விமான்களும், வேலூரிலிருந்து விஜயம் செய்திருக்கும், மவுலானு மவுலவி முஹம்மத் ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும் மற்றும் முஹம்மதியர்களும், ஏன் குறைகூறுகிருர்களென்று உங்களுக்குத்தெரியுமா? இச்சிங்கைமாநகர்பிரபலவாசியும், வர்த்தகருமான ஜனுப்.மவுலானமவுல்வி, லெ. முஹம்மதுகவுஸ் மரைக்காயர், அவர்கள் இவ்வூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜு ஹாஜி ஹாபீஸ் குலாம் சர்வர் அவர்களுக்கு சூட்டின மவுலானு மவுல்வி பட்டத்தைப்போலவே ஒருக்கால் ஸ்ரீமான். பா. தாவூத்ஷா அவர்களுக்கும் சூட்டிவிட்டால் தங்களுடைய பிழைப்புக்கு இடர் உண்டாகும் என்றல்லவா, முகம்மதிய கல்விமான்கள் பொருமைப்படுகிருர்கள். இவர்களுடைய எண்ணங்களெல்லாம் பலிக்கவே பலிக்காது என்பதுடன் இவர்களுடைய மதத்திற்கு முரண்பட்டதாகவே ஸ்ரீமான். பா. தாவூத்ஷா செய்வாரே ஒழிய அவர்களுடைய மதத்திற்கு ஒத்ததைப்போல் ஒப்புக்கொள்வார் என்று நாம் நினைக்கவில்லை. இதிலிருந்தே நீங்கள் யூகித்துக்கொள்ளக்கூடாதா? அவர் முஹம்மதிய மதத்தில் பிறந்தும், நம் தமிழ் மதத்திற்காக எவ்வளவோ, கஷ்டப்பட்டு சிரமமெடுத்து தமிழில் பாண்டித்தியம், பெற்றதுமல்லாமல் மதுரை செந்தமிழ்ச் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றதாக பத்திரிகை மூலியமாய் வெளிவந்ததைப் பார்க்கவில்லையா?

நீங்கள் 10-15, வெள்ளி செலவு செய்து அமெரிக்காவிலிருந்து இரகசியமாய் தெரிந்துக் கொள்ளக்கூடிய அன்பு, என்பதை பகிரங்கமாக ஒருசெண்டும் வாங்காமல், உலகம் அன்பின் மயமாயிருக்கிறதென்று 20-5-25ல் வெளிக்கிளம்பின தமிழ் நேசனில், சொன்னது உங்கள் செவிகளில் தாக்கவில்லையா?

S. P. முத்து, K. சபாபதியவர்களே! உங்களின் அரியாத்தன்மையின் காரணத்தினலல்லவோ அவசரப்பட்டு, எங்கள் மார்க்கத்திற்காக அரும்பெரும் முயற்சியினுல் அபிவிருத்திசெய்ய முன்வந்துள்ள பா. தாவூத்ஷா மஹானின் அந்தரங்கத்தை வெளிப்படுத்தி, காரியம் கைகூடாது குலைத்து விட்டீர்கள். என்கிலும் நம் பா. தாவூத்ஷா

சாஹிபு, அதைரியப்படாது தான் கொண்டுள்ள நோக்கத்தில் ஈடு பட்டு, இந்து மதம், கிறிஸ்துவ் மதம் ஆகிய சத்தியத்தை வெளிப் படுத்த, அரும்முயற்சி எடுத்துகொள்வார்களாக.

கு. கதிர்வேல் பிள்ளை, (இ. மதம்)
ம. சாம்வேல், (கி. மதம்)

இவ்வருடம் ஹஜ்ஜுக்குச் செல்லுகின்றனர்.

சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் இன்றுமக்கமாநகரிலிருந்து கொண்டு செய்து வரும் ஒவ்வொரு காரியமும் இஸ்லாமிய உலகத்தார் மெச்சத் தகுந்ததாகவேயிருக்கின்றது. புண்ணியபூமிகளின் கௌர வத்தைப் பாழ்பண்ணிக்கொண்டிருந்த கொடியவர்களின் ஆதிக்கத்தை விட்டு, அப்பூமிகளை மீட்டு இஸ்லாமிய உலகத்தார்வசம் ஒப்புவிப்பதற் காகவே மக்கமாநகரம் முதலிய தேசங்களைத் தாம் கைப்பற்றியதாயும், அத்தேசங்களைத் தாமே ஆக்ஷிசெய்யவேண்டுமென்கிற உத்தேசம் தமக்கில்லையென்றும் சுல்தான் இபுனுசு ஊத் அவர்கள் மக்கமாநகரை நண்ணியவன்றே விளம்பரப்படுத்தியிருக்கின்றார்கள். சுல்தானவர் கள் மக்கமாநகரைக் கைப்பற்றியதுமுதல் இன்றுவரை செய்திருக்கும் காரியமெல்லாம் பரிசுத்தமான ஹிருதயத்தோடு அல்லாஹுத் ஆலாவுக்கென்றே செய்திருப்பார்கள் என்பது வெளிப்படை. சுல்தா ன் இபுனுசுஊத் அவர்கள் இன்று இஸ்லாமிய உலகத்தின் விசேஷ புகழ்ச்சிக்குரியவராக இருக்கின்றார்கள்.

ஷரீபினுடைய மகன் அலி என்பவர் மக்கமாநகருக்கு உணவுப் பொருளேதுவும் போகாவண்ணம் தடுத்து மக்கமாநகரிலுள்ள ஜனங் கள் மாண்டு போக வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு பற்பல ஏற்பாடுகளைச் செயதிருந்தார். ஆயினும் அல்லாஹுதஆலாதன் அளவற்ற கிருபையின் மூலமாய் மக்கமாநகரிலுள்ள ஜனங்களுக்கு அன்னமளித்து வருகின்றான்.

ஜித்தாவென்னும் துறைமுகப் பட்டணம் அமீரலியின் வசத்தி லிருப்பதாலும் மக்கமாநகருக்கு உணவுப்பொருளேதுவும் வராதவாறு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் காரணமாயும், மற்றும் சில அசம்பா விதமானவைகளை உத்தேசித்தும், இவ்வருடம் ஹஜ்ஜுக்குச்செல்லாம லிருப்பதே உசிதமென்று "ஜமீஅத்துல் உலமா" கிலாபத்கமிட்டி ஆகியவைகள் யோஜனை கூறின. இச் செய்தி ஹஜ்ஜுக்கு செல்ல வேண்டுமென்னும் தீர்மானத்தைக் கொண்டிருந்த முஸ்லிம்களுக்குப் பெரும் துக்கத்தை உண்டு பண்ணிற்று. அன்றியும் அன்னவர்கள் இரத்தக்கண்ணீர் சொரிந்துகொண்டு மிருந்தனர். ஜித்தா துறைமுகம் அமீரலியின் ஸ்வாதீனத்திலிருந்து வருவதால் இவ்வருடம் ஹஜ்ஜு செய்ய முடியாமலிருப்பதை யொட்டி முஸ்லிம்கள் கொண்டிருந்த கவலையை அறிந்த சுல்தான் இபுனுசுஊத் அவர்கள் ஹஜ்ஜாஜிகளுக்கு

[stamp]

வேண்டுமான சௌகரியங்களைச் செய்து முடித்துவிட்டு இவ்வருடம் முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்கு வரவேணுமாய் உலக முஸ்லிம்களை அழைத்திருக்கிறார்கள். சுல்தானவர்களின் அறிக்கையாவது:—

ஹஜ்ஜுக்கு வருகிறவர்களை நாம் வெகு சந்தோஷத்தோடு வரவேற்கின்றோம். உலகத்தின் ஒவ்வொரு பாகங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் இவ்வருடம் மக்கமாநகரை நோக்கி ஹஜ்ஜுக்கு வரவேணுமாய்க் கோருகின்றோம். அல்லாஹுதஆலாவின் உதவியை முன்னிட்டு ஹஜ்ஜாஜிகளின் உரிமை, சௌகரியம் முதலியவைகள் சம்மந்தமாய் நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்றோம். ராபிஹ், லீத், கன்பிதா ஆகிய இம்மூன்று துறைமுகங்களிலும் இறங்குகின்ற ஹஜ்ஜாஜிகளை மக்கமா நகருக்குக் கொண்டுபோய் சேர்ப்பது எங்கள் கடமையெனத் தீர்மானித்துக் கொண்டோம். இம்மூன்று துறைமுகங்களிலும் எங்கள் சைனியங்கள் பிரவேசித்து அவைகளில் தகுந்த பாதுகாப்பையும், அமைதியையும் உண்டுபண்ணிவிட்டன. ஹஜ்ஜாஜிகளுக்கு வேண்டிய அவசியமான எல்லா சௌகரியங்களையும் செய்துகொடுக்கத் தயாராக இருக்கின்றோம். உணவுப் பொருள் முதலியவைகள் மக்கமா நகருக்கு வரவொட்டாமல் தடுத்து அந்நகரிலுள்ள ஜனங்களுக்குப் பெருங்கஷ்டத்தை விளைவிக்கக்கருதி ஷரீபு ஹுஸைனும் அவருடையப் புத்திரரும் செய்த ஏற்பாடுகள் பலிதமடையாது போய்விட்ட செய்தியை இஸ்லாமிய உலகத்திற்கு அதிக சந்தோஷத்தோடு தெரிவிக்கின்றோம்,'' என்பதே.

அமீரலி ஹுசைன் ஆகியவர்களின் ஆக்ஷி ஜித்தாவில் மட்டுமேயிருந்துவருகின்றது. ஜித்தாவை சுல்தான் இபுனுசஊத் அவர்களின் சைனியங்கள் முற்றுகை இட்டிக்கிருன்றன. அமீரலியின் காலம் நெருங்கிக்கொண்டேயிருக்கின்றது. இக்கொடியவர்கள் சீக்கிரத்தில் ஒழிந்துபோவார்கள் என்பது திண்ணம்.

இவ்வருடம் முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குச் செல்லாமலிருப்பது அமீரலிக்கும் அவருக்கு பக்கபலமாக இருக்கும் அரசாங்கத்திற்கும் அதிக நன்மையைப் பயக்குவதாக இருந்தது. ஆனதுபற்றியே இவ்வருடம் முஸ்லிம்மள் ஹஜ்ஜுக்குச் செல்லாமல் தடுத்து விடுவதற்காக பற்பல சூக்ஷிகள் செய்யப்பட்டன. உலக முஸ்லிம்கள் சுல்தான் இபுனுசஊத்தை தெரிசிக்காமல் இருப்பதற்காகவே இவ்வேற்பாட்டைச் செய்துவந்தனர். சுல்தானவர்கள் இஸ்லாம்மதத்தில் கொண்டிருக்கும் விசுவாசம், உறுதி முதலிய நற்குணங்கள் இஸ்லாமிய உலகத்திற்குத் தெரியாமலிருப்பதே அமீரலிக்கு அவசியமாக இருந்தது. ஆயினும் சுல்தான் இபுனுசஊத் அவர்களின் அரிய முயற்சியும் சமயோசிதமான காரியங்களும் அமீரலியின் ஆசையில் மண்ணைவாரி போட்டுவிட்டன.

சுல்தான் இபுனுசஊத் அவர்களின் அறிக்கை உலகமுஸ்லிம்களுக்குப் பெரும் சந்தோஷத்தை அளித்துவிட்டது, சுல்தானவர்களின் அறிக்கையைக்கண்டு இந்தியமுஸ்லிம்களுக்கும் அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. சுல்தானவர்களின் அறிக்கையினாலுண்டான திருப்தியை முன்னிட்டு இந்தியமுஸ்லிம்கள் இவ்வருடம் ஹஜ்ஜு

க்குச் செல்லலாமென்று மௌலானா ஷௌக்கத்அலி அவர்கள் இந்திய முஸ்லிம்களுக்கு அனுமதியளித்து விட்டார்கள். மௌலானா ஷௌக்கத் அலி அவர்கள் அனுமதியளித்தபின் ஹஜ்ஜாஜிகளைக் கப்பல் கம்பெனிகள் தங்களின் கப்பல்களில் ஏற்றிச் செல்லுகின்றன.

இன்று முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குச் சொல்லுவது சம்மந்தமாகவும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கிணங்க அஹ்மதியாக்கள் முஸ்லிம்களுக்கு பாதகமாய் தங்களின் "பைகாமெஸுலஹ்" என்னும் பத்திரிக்கையில் எழுதியும் பிரசாரம் புரிந்தும் வருவதையறிந்த உண்மை முஸ்லிம்கள் அவ்வகுப்பார் இஸ்லாமிய உலகத்தின் தேகத்திற்கு ஒருவடுவாக விருக்கின்றனர் என்பதை ஆக்ஷேபிப்பார்களா ?

"தாருல் இஸ்லாம்" பத்திராதிபர்

சிங்கப்பூரிலிருந்து ஜனாப் வா. மு முகம்மது ஷரீபு பின் வருமாறு எழுதுகிறார்:—

கனம் பா. தாவூத்ஷா சாஹிபவர்களை சிங்கப்பூர் கேம்பல் லேன் 19-ம் நெம்பர் கட்டடத்தில் நான் ஜனாப் மீ. சேய்கு முகையதீன், செ. அ. முஹம்மது காசிம் முதலிய எனது நண்பர்களுடன் நேரில் கண்டு பேசிய விவரம் அடியில் வருமாறு:—

கேள்வி:—தங்களைப்பற்றி நமது முஸ்லிம்கள் மார்க்க விஷயமாய் அதிக சந்தேகங்கொண்டு எதிர்க்கிறார்களே? அதைத் தயவு செய்து விளக்கிக் காட்டுங்கள்.

பதில்.—நான் அஹமதியரல்ல ; மிர்ஸா குலாம் அஹமத், தான் நபி என்று சொல்லுகிறார். அதுவும் சரியல்ல. அதைப்பற்றி எனக்கொரு பாத்தியமுமில்லை.

கேள்வி:—நபி ஈஸா (அலை) அவர்களைப் பற்றி தாங்கள் என்ன அபிப்பிராயம் சொல்கிறீர்கள் ?

பதில்:—ஈஸாவே உம்மை மௌத்தாக்கி என்னளவில் உயர்த்திக் கொள்வேனென்று அல்லாகுத்தஆலா சொல்லியிருக்கிறான்.

கேள்வி:—நபி நாயகத்தின் ஹதீதில் இப்னுமரியம் வருவாரென்று சொன்னதை தலீலுடன் ஒரே தஹ்வீல் செய்யுங்கள். அது பொருத்தமாயிருக்கும்.

பதில்:—தலீலுடன் ஹதீதை ஒன்றுபடுத்திச்சொல்லமுடியாது. இப்னு மரியம் வருவாரென்ற ஹதீதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

கேள்வி:—தங்கள் அபிப்பிராயப்படி இரண்டு மரியம் (அலை) இரண்டு ஈசா (அலை) பிறந்துவிட்டார்களல்லவா? இது மார்க்கத்திற்கு எங்ஙனம் பொருந்தும்?

பதில்:—அப்படி இந்த சிற்றடியேனுக்குத் தோன்றவில்லை. தாங்களே அதை ஒன்றுபடுத்தி தஹ்வீல் செய்து காட்டுங்கள்.

கேள்வி:—நபி ஈசா (அலை) அவர்கள் மரியம் (அலை) அவர்களுடைய மகனாகவே உலகில் இருந்தார்கள். அவர்களை துனியாவைவிட்டும் மறைத்து அல்லாகுத்த ஆலா தன்னளவில் உயர்த்திக்

கொண்டான். மீண்டும் இவர்கள் வருவதை ஆண்டவன் தனது தூதராகிய நமது நபிநாயகமவர்களுக்கறிவித்தபடி இப்னு மரியம் (மரியமுடைய மகன்) வருவாரென்று நாயகம் அவர்கள் சொன்ன ஹதீதை கொண்டு நபி ஈசா (அலை) அவர்கள் ஹயாத்துடன் (ஜீவியமாய்) இருக்கிறார்களென்று வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது.

பதில்:—ஹதீதில் பின் வருமாறு சொல்லப் பட்டிருக்கிறது:—பேரீச்ச மரத்தின் ஆண்மரத்துப் பூவை பெண்மரத்துப் பூவுடன் சேர்த்துக் கட்டி வைத்தால்தான் அது காய்க்குமென்று அவாம்கள் (அறியாதவர்கள்) செய்துவந்த வழக்கத்தை நபிநாயகமவர்கள் கண்டு, அந்த கவ்முகளைப் பார்த்து அப்படிச் செய்யாதீர்களென்று சொன்னார்கள். அந்தப்படி செய்யாதிருந்த வருஷத்தில் பேரீச்சங்கனி காய்க்கவில்லை. அதைப்பற்றி ஜனங்கள் நபிநாயகமவர்களிடத்தில் கேட்டதற்கு லோக வழக்கத்திற்கு என் வார்த்தை மாற்றமா யிருந்தால் அதை விட்டுவிடுங்கள். மூளைக்க வைப்பதும் கனியைக் கொடுப்பதும் அல்லாஹ்வின் குத்ரத்தென்று பதில் சொல்லியிருக்கிறார்கள்.

கேள்வி:—நாம் ஈசாநபியைப் பற்றி பேசும்போது என்னை மற்றொரு வழியில் திருப்பிக்கொண்டு போகிறீர்களே? அப்படி போகக் கூடாது. மேலும் நபிநாயகம் அவர்கள் வஹியை அல்லாமல் எதையும் சொல்ல வில்லையென்று குர்ஆன் ஷரீபில் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன சந்தேகம்?

பதில் :—உண்மைதான். இந்த ஹதீது ஹாஷியா்விலுள்ளது. இதற்குப் பொருந்தியதுமல்ல. தயவுசெய்து இதை நிறுத்திவிடுங்கள் ....ஈசாநபி மௌத்தாய்விட்டார்களென்று சொன்னாலென்ன? ஈமான் கெட்டுப் போகிறதா? அல்லது தொழுகை கெட்டுப் போகிறதா ?

கேள்வி:—குர்ஆனில் நின்றும் எந்த ஓர் அக்ஷரத்தையாவது புரட்டினால் இஸ்லாத்தில் நின்றும் அவர்களை இன்கார் செய்யப்படும் (விலக்கப்படும்).

பதில்:—உங்களுடைய கிப்லாவைப் பார்த்து வணங்கினவர்களை நீங்கள் காபரென்று சொல்லாதீர்களென்று நபிநாயகம் சொல்லியிருக்கிறார்கள்.

கேள்வி :—அல்லாகுத்தஆலாவும், அவனுடைய றசூலும் சொன்னமார்க்கத்தில் கிபுலாவைமட்டும் போதுமாக்கிக்கொள்ளவில்லை. மார்க்கப்படி முழுதும் நேராய் நடந்தாலொழிய அந்த கிபுலா நேரல்ல.

பதில்:— இன்னும் நான்கு மத்ஹபுகளிலும் கூடுதல் குறைத் தலைப்பற்றி ஒருவருக்கொருவர் பொருத்தமற்றதாய் காணப்படவில்லையா ?

கேள்வி:—மத்ஹபுகள் பிரிவினையானாலும் குர்ஆன் ஷரீப்ஒன்று தீன். நபியும் ஒன்றுதான். இமாம் ஜமாஅத்து தொழுகையும், நோன்பும், ஸக்காத்தும் ஹஜ்ஜும் ஒன்றுதான். மற்றவைகளும் ஒருவருக்கொருவர் ஒப்புக்கொள்ளப்பட்டவையாகவே நடந்தேறி வருகின்றன. இன்னும் இதற்குள் மார்க்கப்படி சமாதானம் நிலவியிருப்பதைக் காணும்போது வித்தியாசமென்பது கிடையாது. இன்று

யாரேனும் ஒரு புதிய குர்ஆனை தூக்கிக்கொண்டும், ஒரு புதிய நபியை இழுத்துக்கொண்டும் வந்தால் அது பொருத்தமற்றதாகவே கருதப்படும்.

பதில் :—நேரமாய்விட்டது. இதைப்பற்றி நான் தகறூர் செய்யப் பிரியப்படவில்லை.

கேள்வி ;— சரி. மற்றொரு விஷயம் பேசுகிறோம். நரகத்திற்கு முடிவு உண்டென்பது மெய்தானா?

பதில் :—கிருபையுள்ள நாயன் பாவிகளையும் கரைசேர்த்து வைக்கப் போதுமானவன்.

கேள்வி:—அல்லாஹு தஆலா ஆகிரத்தில், குறிப்பாக மூமின்களுக்கு மட்டும் தனதாகக் கிருபை செய்கிறவனென்று குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது.

பதில் :—தௌபாச் செய்தால் பாவத்தைப் பொறுத்துகொள்ளுவேனென்று அல்லாகுத்த ஆலா சொல்லியிருக்கிறான்.

கேள்வி :—ஒருவன்செய்த நன்மைகளும் தீமைகளும் அவன் மௌத்தானவுடன் நாயனின் கட்டளைப்படி பிரிக்கப்படும்போது தௌபா எங்ஙனம் பிறக்கும்?

பதில்—மணியாகிவிட்டது. விருந்திற்கழைத்தவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தயவுசெய்து இம்மட்டில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

கேள்வி:—நல்லது தாங்கள் போகலாம் இதைப்பற்றி இன்னொரு காரியம் செய்யலாம். அதாவது இன்னும் சில உலமாக்களைக் கூட்டி அந்த மஜ்லிஸில் எல்லா சந்தேகங்களையும் நிவர்த்தி செய்து கொள்ளலாமே. தங்களுக்கிது பிரியந்தானா?

பதில்:—... ....இந்த வாதம் லாகூர்வரை பிணைக்கப்பட்டிருக்கிறது. நான் இவ்விடத்தில் ஒருவாறு தோற்றுப் போனாலுங் கூட அது தீர்ந்துவிடாது.

கேள்வி:—மெய்தான். இதில்நின்றும் இருவரைக் காபூலில் கல்லெறிந்துகொன்று விட்டார்களாம். நான் அதை பேப்பரிலும் பார்த்திருக்கிறேன். இது ஒரு பெரும் கஷ்டமான காரியம்தான். சரி, தாங்கள் பயிரயாரப் புறப்படுங்கள் நாங்களும் போய் வருகிறோம்,

குறிப்பு:—"அல்கலாம்" ஆசிரியர் கனம். கூ. அ. அப்துல் மஜீத் சாஹிப், அவர்கள் மவுலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களை நேரில் முலாகாத்து செய்து சம்பாஷித்ததில் மவுல்வி முஹம்மத்அலி, சாஹிபுடைய ஆங்கில குர்ஆன் மொழிபெயர்ப்பில் எண்ணிறந்த தவறுதல்கள் இருப்பதாகவும் அவைகளை திருத்தப்பட வேண்டியது, அவசியமே யென்றுங் கூறியதாக அல்கலாமில் வெளிவந்திருப்பதை நேயர்கள் அறிந்திருக்கலாம். காதியானிகளின் சூட்சுமியத்தையும் அப்போதைக்கப்போது அதற்கேற்ப ம் தக்க மறுப்புகளையும் அறிய விருப்ப முடையோர்கள் ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையிலும் அல்கலாம் முஸல்மான் தாஜுல் இஸ்லாம், முதலிய இம்மூன்று மாதாந்தர சஞ்சிகைகளிலும் காணலாம்.... ....

முஹம்மத் ஷரீப்